டிசம்பர் 2010 December | இதழ் 239 ISSUE

# தமிழர் தகவல்

# TAMILS' INFORMATION







## தேசிய உணர்வும் மாவீரர் நினைவும் எழுச்சி கொண்ட நாள்!

## தமிழர் வெள்ளத்தால் மார்க்கம் திடல் பொங்கி எழுந்தது!





20 வது ஆண்டு
20th Year

Growing with the Community
ESTD 1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
அன்ரன் கனகசூரியர்
குயின்ரஸ் துரைசிங்கம்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

ஆசிரியரிடமிருந்து — **From the Editor**

## டிசம்பர் 15 - மறக்க வேண்டாம்!

சிறிலங்கா அரசாங்கத்தின் போர்க்குற்றங்கள் உலகப் புகழ் பெற்றவை; கடந்த பதினெட்டு மாதங்களாக இவை பற்றி எல்லோரும் பேசிக் கொண்டிருக்கிறோம்.

டப்ளின் பொதுமக்கள் ஆணைய விசாரணை, சி.என்.என் காணொளிக் காட்சிகள், மனித உரிமைகள் ஆணைய அறிக்கைகள், சர்வதேச மன்னிப்புச் சபையின் வெளியீடுகள், உலகத் தமிழர் பேரவையின் ஒளிப்பட சாட்சிகள் என்பன அவ்வப்போது போதிய நிரூபணங்களாக வந்து போர்க்குற்றங்களை ஆதாரப்படுத்தியுள்ளன.

இதனை மறைப்பதற்காக அதன் சூத்திரதாரிகளான ராணுவ அதிகாரிகளையே ராஜதந்திரிகளாக மாற்றி, உலகத்தின் கண்களை ஏமாற்றும் வேலையில் மகிந்தவின் ஆட்சி நிர்வாகம் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றது.

இதற்குப் பக்கபலமாக 'கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம்' என்ற அலங்காரப் பெயரில் ஓர் ஆணைக்குழுவை அமைத்து, அதே ராஜதந்திரிகளை முடிக்குரிய சாட்சிகளாக்கி ஓரங்க நாடகமொன்றையும் அரசாங்கம் அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றது.

கொலைகளுக்கு உத்தரவிட்டவர்களே ஆணைக்குழு அமைப்பின் உத்தமர்களாகவும், கொலைகளை நடத்தியவர்களே 'அப்படியாக எதுவும் நடைபெறவில்லை' என்னும் சத்தியச் சாட்சிகளாகவும் காட்சி கொடுக்கின்றனர்.

சர்வதேசத் தமிழரின் நெருக்குதல் காரணமாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கி மூன் நியமித்த நிபுணர் குழு தனது பணியை ஆரம்பிப்பதற்கு முன்னர், மகிந்த ராஜபக்ச நியமித்த நல்லிணக்க ஆணைக்குழு தனது விசாரணையின் அரைப் பகுதியை முடித்து விட்டது.

பான் கி மூனின் நிபுணர்கள் குழு ஒரு விசாரணைக் குழுவல்ல. சிறிலங்காவில் போர்க்குற்றங்கள் நடைபெற்றதாயின் அது தொடர்பான ஒரு விசாரணையை ஆரம்பிக்க வேண்டுமா எனக் கண்டறிவதற்கான ஆலோசனையை மட்டுமே இக்குழுவினால் வழங்கமுடியும்.

இதற்கான ஆவணங்களையும் ஆதாரங்களையும் பொதுமக்களிடமிருந்து இக்குழு இப்போது கோரியுள்ளது. இந்த மாதம் 15ஆம் திகதி வரை இதனை எவரும் அனுப்பிவைக்க முடியும். போர்க்குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமே இதனை அனுப்ப வேண்டுமென்றில்லை.

பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள், நண்பர்கள், அந்தக் குடும்பங்களை அறிந்தவர்கள் போதிய ஆதாரங்களும் ஆவணங்களும் தம்மிடமிருந்தால், அவர்கள் வெளிநாடுகளில் வசிப்பவர்களாக இருந்தாலும், அவைகளை நிபுணர்கள் குழுவுக்கு அனுப்பி வைக்கலாம். ரொறன்ரோவிலுள்ள 'போரால் பாதிக்கப்பட்டோருக்கும் மனித உரிமைகளுக்குமான நடுவம்' கனடாவிலுள்ளவர்களுக்கு இப்பணியில் உதவி வருகின்றது.

போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச அளவிலான சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமென அமெரிக்கா, பிரிட்டன் உட்பட சர்வதேச தலைமைத்துவ அமைப்புகள் கோரிவருகின்ற இக்காலத்தில், பான் கி மூனின் நிபுணர் குழுவுக்கு போர்க்குற்ற ஆதாரங்களை வழங்குவது அவசியம்.

தமிழினப் படுகொலைகாரர்களை சர்வதேச நீதிமன்றில் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டுமாயின், போர்க்குற்ற ஆதாரங்களையும் ஆவணங்களையும் தவாறது இக்குழுவுக்கு அனுப்ப வேண்டும்.

மறந்துவிடக் கூடாது! டிசம்பர் 15ஆம் திகதி இதற்கான இறுதி நாள்!

திரு எஸ். திருச்செல்வம்

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Anton Kanagasooriyar
Quintus Thuraisingam

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2011ம் ஆண்டின் இலக்கில் அறுபது வீதமானவர்கள் பொருளாதார குடிவரவாளர்

## 2011 Immigration Plan: 60% Economic Sreams

2011 ஆம் ஆண்டினது கனடாவின் குடிவரவு இலக்கு அதிகாரபூர்வமாக கடந்த மாத முதல் வாரத்தில் அறிவிக்கப்பட்டது. சகல வகுப்புகளையும் சேர்த்து மொத்தம் 240,000 - 265,000 வெளிநாட்டவர்கள் இங்கு குடியேற அனுமதிக்கப்படுவர்.

கனடாவின் பணவீக்கத்தின் பின்னரான நிலைமையில் சட்டப்படியாக வருபவர்களே இங்குள்ள தொழிற் சந்தைக்குத் தேவைப்படுகின்றார்கள் என்று கனடிய குடிவரவு அமைச்சர் ஜேசன் கெனி அறிவித்துள்ளார்.

இதனால், பொருளாதார பலத்துடன் வரும் குடிவரவாளர்கள் புதிய இலக்கில் சுமார் அறுபது வீதமானவர்களாக இருப்பர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மதிப்பீட்டின் பிரகாரம் ஆகக்குறைந்தது 150,000 பேர் பொருளாதார பலமுடையவர்களாக இருப்பர். இதில் சுமார் அரைவாசிப்பேர் மத்திய அரசினால் தெரிவு செய்யப்படுவர். மிகுதிப் பேர் மாகாணங்களினால் தெரிவு செய்யப்படுவர்.

Family Class எனப்படும் குடும்ப உறவுகள் வகுப்பில் சுமார் அறுபதாயிரம் பேருக்கு அனுமதி கிடைக்கும். இவர்களுள் சுமார் 45,000 பேர் வாழ்க்கைத் துணைவர்கள், பிள்ளைகளாகவும், சுமார் 15,000 பேர் பெற்றோர் மற்றும் அவர்களின் பெற்றோராகவும் (parents and grand parents) இருப்பர்.

ஏதிலிகள் வகுப்பினருக்கு 23,200 - 29,000 இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவர்களுள் நான்கு பிரிவினர் இருப்பர். 2011ஆம் ஆண்டுக்கான குடிவரவு இலக்கில் இவர்களை பாதுகாக்கப்பட வேண்டிய ஆட்கள் (Protected Persons) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஏதிலிகள்/அகதிகள் என்ற பதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளது.

கனடிய சனத்தொகையில் ஒரு வீதமான தொகையினரை வருடாந்தம் இங்கு குடியேற அனுமதிக்க வேண்டுமென்பது இந்நாட்டின் நீண்டகாலக் கொள்கை.

## புதிய குடிவரவுச் சட்ட மூலம் C 49 ஆட்கடத்தல்காரரை இலக்கு வைத்தாலும் ஏதிலிகளையே நேரடியாகப் பாதிக்கிறது!

## Bill C 49 punish not smugglers, but refugees; It should be defeated

கனடிய மத்திய அரசாங்கம் சி-49 என்னும் இலக்கச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. சட்டவிரோதமான ஆட்கடத்தலைத் தடுக்கவே இச்சட்ட மூலம் அவசியமென்று அரசாங்கம் கூறுகின்றது.

இதன் இரண்டாவது வாசிப்பின் மீதான விவாதம் இதனை எழுதும்வரை நடைபெறவில்லை. இதற்குக் கனடிய மக்களிடமும் மற்றும் பொது அமைப்புகளிடமும் ஆதரவைத் தேடும் முயற்சியில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

மறுபுறத்தில், அகதிச் சமூகங்களும் அகதிகளுக்கான சேவை நிறுவனங்களும் இச்சட்ட மூலத்தை வன்மையாக எதிர்த்து நாடளாவிய ரீதியில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. ஆட்கடத்தலைத் தடுப்பதற்காகவே சி-49 சட்டமூலமென்று அரசாங்கம் சொன்னாலும், கனடாவுக்கு வரும் ஏதிலிகளையே இது நேரடியாகப் பாதிக்கப்போகின்றது. அது மட்டுமன்றி, ஏற்கனவே ஏதிலிகளாக வந்தவர்களும் பெருமளவில் பாதிக்கப்படப் போகின்றனர்.

ஆட்கடத்தல்காரர் என்று சொல்லப்படுபவர்கள் கனடாவுள் இருப்பதில்லை. அவர்கள் வெளிநாடுகளிலேயே வசிப்பவர்கள். எனவே இச்சட்டத்தால் அவர்கள் ஒருபோதும் பாதிக்கப்படப் போவதில்லை. ஆனால் ஏதிலிகளாக வருபவர்கள், அவர்கள் சிறுவர்களாக இருந்தாலும் ஒரு வருடத்துக்குக் கட்டாயமாக தடுத்து வைக்கப்படுவர். இவர்களுக்குச் சுயாதீனமான மறுபரிசீலனை வாய்ப்பும் சாத்தியமாக இருக்காது.

அத்துடன், இவர்கள் தமது குடும்பங்களுடன் மீளிணைவது (குடும்பத்தினரை சட்டபூர்வமாக வரவழைப்பது) ஐந்தாண்டுகளுக்கு முடியாத காரியமாக்கப்படுகின்றது. இந்த ஐந்தாண்டு காலப்பகுதியில் இவர்கள் வெளிநாடுகள் எங்கும் பயணம் செய்யவும் முடியாது.


சி-49 சட்டமாக்கப்படுமாயின், இரண்டு வகையான ஏதிலிகளை இது உருவாக்கும். எவ்வாறு இவர்கள் கனடாவுக்கு வந்தார்கள் என்ற அடிப்படையில் இரண்டு வகையாக்கி அவர்களுக்குத் தண்டனையை வழங்க வழிசமைக்கும். கனடாவில் சட்டத்தின் முன்னால் யாவரும் சமன் என்ற கோட்பாட்டை இது மீறுவதாகும்.

ஏதிலிகளாக வருபவர்களுக்கு கட்டாய தடுப்புக் காவலையும் இதன் வழியாக வழங்க முடியும். இங்கும் சிறார்களுக்கு விதிவிலக்கில்லை. ஏதிலி நிலைமை மறுக்கப்படும் ஒருவரின் மேன்முறையீட்டு உரிமையையும் இச்சட்டம் மறுக்கின்றது.

ஏற்கனவே கனடாவில் வசிக்கும் கனடிய குடியுரிமை (citizenship) பெறாத ஒருவர் வெளிநாடொன்றுக்குச் சென்றுவிட்டு நாடு திரும்புகையில், அவர் மீது ஏதாவது சந்தேகமிருப்பின் அவர்களைத் தடுத்து வைக்கவும் சி-49 சட்ட மூலம் கனடிய குடிவரவுத் துறையினருக்கு அதிகாரங்களை வழங்குகின்றது. ஆட்கடத்தலைத் தடுக்கும் சட்டம் இவ்வகையான பல சட்டவிரோத செயற்பாடுகளுக்கு வாய்ப்பளிப்பதைப் பலரும் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

கனடிய என் டி. பி. கட்சியும், புளொக் கியுபெக்கா கட்சியும் இதனை எதிர்த்து வருகின்றன. லிபரல் கட்சி எந்த முடிவையும் அறிவிக்காதுள்ளது. தனது எம்.பிக்களை அவரவர் விருப்பப்படி வாக்களிக்க லிபரல் தலைமை அனுமதிக்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் எவ்வகையிலும், இச்சட்டமூலத்தை இரண்டாவது வாசிப்பில் தோற்கடிக்கும் பகீரத முயற்சியில் அக்கறையுள்ளவர்களும், அகதிகள் சேவை அமைப்புகளும் மேற்கொண்டு வருகின்றனர். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

## சின்னச் சின்ன தகவல்கள்

றொறன்ரோ நகரின் புதிய மேயர் றொப் போர்ட்டும் நாற்பத்தி நான்கு உறுப்பினர்களும் இந்தமாதம் (டிசம்பர்) முதலாம் திகதி பதவியேற்றனர். 2014 நவம்பர் இறுதி வரை இவர்கள் பதவியிலிருப்பர். புதிய மேயர் தமது உறுதிமொழிகளை நிறைவேற்ற பெரும் சவால்களைச் சந்திக்க நேரும்.

ஒன்ராறியோ மாகாண சபைக்கான தேர்தல் எதிர்வரும் (2011) அக்டோபர் மாதம் ஆறாம் திகதி நடைபெறவுள்ளது. கடலில் கவிழும் கப்பலிலிருந்து எலிகள் ஓடித் தப்புவதுபோல, மாகாண ஆட்சியிலிருக்கும் மக்கன்ரியின் லிபரல் கட்சியின் பல உறுப்பினர்கள் பதவி விலக ஆரம்பித்துள்ளனர்.

கனடாவின் பல்வேறு கருத்துக் கணிப்புகளில் மத்திய ஆட்சியிலிருக்கும் கன்சர்வேடிவ் கட்சி செல்வாக்கு இழந்து வருவதைக் காட்டி நிற்கின்றது. ஆனால், பிரதமர் பதவிக்குச் சிறந்த தலைவராக ஸ்டீபன் ஹாப்பரே இப்போதும் முன்னணியில் திகழ்ந்து வருகிறார்.

நவம்பர் மாதம் 11ஆம் திகதியில் வரும் தேசியவீரர் நினைவு நாளை தேசிய விடுமுறை தினமாகப் பிரகடனம் செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ஒன்ராறியோ, கியுபெக், மனிடோபா தவிர்ந்த மற்றைய மாகாணங்களில் இந்நாள் சட்ட ரீதியான விடுமுறையாகவுள்ளது.

றொறன்ரோ பெருநகரில் மூட்டைப் பூச்சித் தொல்லை மேலும் அதிகரித்து வருவதாக சுகாதார சேவை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சில ஹோட்டல்களிலும், குறிப்பிட்ட பல தொடர் மாடிகளிலும் மூட்டைப் பூச்சிகள் மிக வேகமாகப் பரவி வருவது ஆபத்தானது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்ராறியோ மாகாணத்தின் மின்கட்டணத்தை பத்து வீதத்தினால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இது போதாதென்று வரியிறுப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். அடுத்த வருடத் தேர்தலை முன்னிட்டு எடுக்கப்படும் ஒரு ஏமாற்று முயற்சி என்றும் இவர்கள் கூறுகின்றனர்.


கனடாவில் துப்பாக்கியால் நடத்தப்படும் கொலைகள் குறைந்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். 2008ஆம் ஆண்டில் 200 கொலைகளும், கடந்தாண்டில் 179 கொலைகளும் துப்பாக்கிகளால் மேற்கொள்ளப்பட்டன. இந்தாண்டில் இத்தொகை மேலும் குறையலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

சாரதி அனுமதிப் பத்திரம் தற்காலிகமாக தடைசெய்யப்பட்டவர்கள் வாகனம் செலுத்துகையில் பிடிபட்டால், அவர்களின் சாரதி அனுமதி உடனடியாக ரத்தாகும் முறைமை இந்த மாதத்திலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது. இதற்கான உத்தரவை ஒன்ராறியோ மாகாண அரசு பிறப்பித்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் நவம்பர் 11ஆம் திகதியில் தேசிய வீரர்கள் நினைவு தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இதனை முன்னிட்டு சிவப்பு நிற 'பொப்பி' மலர்களை மேலாடையில் அணிவதற்காக விற்பனை செய்வது வழக்கம். இப்போது பத்தில் ஒருவரே இதனை அணிவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கனடாவில் வீடுகளின் விலை அவற்றின் உண்மையான பெறுமதியைவிட அதிகமானதென்று 'எக்கனமிஸ்ட்' சஞ்சிகை சுட்டிக்காட்டியுள்ளது. விலை சுமார் 2.9 வீதம் அதிகமானதாக இருப்பதாக சஞ்சிகை மேலும் தெரிவித்துள்ளது. கடந்த மூன்றாண்டுகளின் சந்தை விலை இதற்காக ஆய்வு செய்யப்பட்டது.

## பிரிகேடியர் தமிழ்ச்செல்வனுக்கு பிரான்சில் நினைவுச்சிலை



பிரான்ஸ் நாட்டின் பாரிசிலுள்ள புறநகர்ப் பகுதியான லாக்கூர்னோவ் மாநகரசபை, தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளராகவிருந்த பிரிகேடியர் தமிழ்ச்செல்வனின் நினைவாக அவரது மார்பளவுச் சிலையொன்றை தனது வளாகத்தில் திறந்து வைத்துள்ளது. அவரது மூன்றாவது ஆண்டு நினைவாக கடந்த மாதம் முதலாம் திகதி இச்சிலை திறக்கப்பட்டது.

பிரிகேடியர் தமிழ்ச்செல்வனை இரண்டு தடவைகள் தமிழகத்திலும், பின்னர் வெளிநாட்டுப் பேச்சுவார்த்தையின் போதும் சந்தித்து நெருக்கமாகப் பழகியவரான திரு. அந்தோனியோ ருசேல் வைபவ ரீதியாகச் சிலையைத் திறந்து வைத்தார். இதனை அரசியலாகப் பார்க்காமல் மனிதநேய செயற்பாடாகப் பார்ப்பதாக அவர் இங்கு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

ஆனாலும், இச்சிலை அமைப்பதற்கு சிறீலங்கா அரசு கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தது. இதற்குப் பதிலளித்து கொழும்பிலுள்ள பிரான்ஸ் தூதரகம் விடுத்த அறிக்கையில், தமது நாட்டு உள்நாட்டு அரசாங்கங்களின் சட்டத்துக்கு அமைய இவ்விடயங்களில் பிரான்ஸ் மத்திய அரசாங்கம் தலையிட முடியாது என்று தெரிவித்துள்ளது. இதனால் சிறீலங்கா அரசு மிகவும் விசனமடைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் தாத்தா

தூய வெள்ளை தாடி, சிவப்பு நிற உடை, அன்பும் கனிவும் நிறைந்த பார்வை, சிரித்த முகம், கை நிறைந்த பரிசுகள் - இந்த உருவத்தைப் பார்த்தவுடன் சின்னக் குழந்தைகள் "கிறிஸ்மஸ்" தாத்தா என்று மகிழ்ச்சியுடன் கூச்சலிடுவார்கள். இன்று வரை, பல நாடுகளிலும் ஒவ்வொரு சிறு குழந்தையும், கிறிஸ்மசுக்கு முதல் நாள் இரவு அவர்கள் விரும்பும் பரிசுப்பொருளை கிறிஸ்மஸ் மரத்தின் கீழ் அல்லது அவர்களது காலுறைக்குள் "சாண்டா க்ளாஸ்" என்று அழைக்கப்படும் கிறிஸ்மஸ் தாத்தா வைப்பதாக நம்புகிறார்கள்.

மேல்நாட்டில், குழந்தைகள் தமக்கு விருப்பமான பரிசுப்பொருள்கள் குறித்து கிறிஸ்மஸ் தாத்தாவிற்குக் கடிதம் எழுதுவது கூட உண்டு. இவர் வட துருவத்தில் வசிப்பவர், இவர் கிறிஸ்மஸ் தினத்திற்கு முந்திய இரவு, பறக்கும் கலைமான்கள் பூட்டிய ஸ்லெட்ஜ் எனப்படும் வண்டியில் வந்து குழந்தைகளுக்குப் பரிசுகள் கொடுப்பார். இவரிடம் நல்ல குழந்தைகள், கெட்ட குழந்தைகள் இவர்கள் குறித்த பட்டியல் இருக்கும். இவர் நல்ல குழந்தைகளுக்கு அவர்கள் விரும்பும் பரிசை அளிப்பார்.

மோசமான குழந்தைகளுக்குப் பரிசே கொடுக்கமாட்டார் என்றெல்லாம் நிறையக் கற்பனைக்கதைகள் தலைமுறை தலைமுறையாகக் குழந்தைகள் மத்தியில் வழங்கி வருகின்றன.

இந்தக் கிறிஸ்மஸ் தாத்தா யார்? இவர் வரலாறு என்ன என்பதைப் பார்ப்போம்.



சான்டா க்ளாஸ் குறித்த பலவிதமான வரலாறுகள் நிலவுகின்றன. முக்கியமாக, செயிண்ட் நிகோலஸ் என்ற பாதிரியாரின் தாக்கமே "சான்டா க்ளாஸ்" என்பது பெரும்பாலாரது கருத்து. இந்த அருளாளர் கி.பி. மூன்றாம் நூற்றண்டில் மிரா என்று பண்டைக்காலத்தில் அழைக்கப்பட்ட இன்றைய துருக்கி நாட்டில் வாழ்ந்தவர். இவர் குழந்தைகளிடம் மிக்க அன்பாக இருந்தவர் என்றும், பெருந்தன்மையும் கருணையும் நிரம்பியவரான இவர் பல அற்புதங்களை நிகழ்த்தியவர் என்றும் பல விதமான கதைகள் நிலவுகின்றன.

இவர் எப்பொழுதும் தம்மிடம் பல பரிசுப்பொருட்களை வைத்திருப்பார் எனவும், திடீர் திடீர் என்று குழந்தைகளுக்குப் பரிசுகள் கொடுப்பது இவருடைய வழக்கம் என்றும் கூறப்படுகிறது. ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்த மூன்று இளம்பெண்கள், வரதட்சணை கொடுக்க இயலாததால் திருமணமாகாமல் இருக்கவேண்டியிருந்ததையும், இதன் காரணமாக அவர்கள் அடிமைகளாக விற்கப்பட நேரிடும் என்பதையும் அறிந்த இவர், இரவு நேரத்தில் அவர்களது வீட்டின் புகைபோக்கி வழியாக தங்கக் காசுகள் நிறைந்த மூன்று பைகளைப் போட்டதாகவும், அப்பைகள் அப்பெண்கள் தமது வீட்டின் கணப்பின் அருகில் காயப்போட்டிருந்த காலுறைகளில் விழுந்ததாகவும் கதை நீள்கிறது.

சிலரோ, அவர் வீட்டு வாசலில் கிடந்த அப்பெண்களின் காலுறை நிறையத் தங்கக்காசுகளைப் போட்டதாகவும் கூறிவருகின்றனர். இதன் காரணமாகவே இன்றும் சில நாடுகளில் குழந்தைகள் தமது காலுறைகளில் கிறிஸ்மஸ் தாத்தா தாம் விரும்பும் பரிசுகளை நிரப்புவார் என நம்பி வருகின்றனர். செயிண்ட் நிகோலஸ் குறித்த இன்னொரு கதையும் பிரபலமானதே! மூன்று சிறுவர்கள் ஒரு நாள் இரவு நேரத்தில் ஒரு பண்ணையில் தங்க இடம் கேட்டு வந்ததாகவும், அந்தப்பண்ணைக்குச் சொந்தக்கார ஒரு கொடிய விவசாயியும் அவனது மனைவியும் அந்த மூன்று சிறுவர்களையும் கொன்று சிறு சிறு துண்டுகளாக வெட்டி வைத்துவிட்டதாகவும், அக்கொடுஞ்செயலைத் தமது அதிசயத் திறனால் அறிந்து கொண்ட பாதிரியார் அக்கொடியவர்களைத் தண்டித்து, இறந்த சிறுவர்களை உயிர்ப்பித்ததாகவும் சொல்கிறது அந்தக் கதை.

டச்சுக்காரர்கள் குடியிருப்புகளில் வழங்கி வந்த நம்பிக்கையான செயிண்ட் நிகோலஸ், நெதர்லாந்து நாட்டினரின் சின்டர் க்ளாஸ் (Sinter Klass) பரிசுகள் வழங்குபவர் என்பதும், ஜெர்மன் நாட்டினரது நம்பிக்கையான "ஸான்ட் நிக்கலஸ்" (Sankt Niklaus), பிரஞ்சு நாட்டினரது "பியர் நோயல்" (இங்கிலாந்து நாட்டின் "கிறிஸ்துமஸ் தந்தை" முதலிய அனைத்து நம்பிக்கைகளும் "செயின்ட் நிகோலஸ்" பாதிரியாரின் அடிப்படையிலேயே உருவானவைதான்.

அமெரிக்க நாட்டில் குடியேறியவர்கள் தம்முடன் எடுத்துச் சென்ற கலாசாரங்களில், நம்பிக்கைகளில் இந்த "கிறிஸ்மஸ்" பரிசுகளும் அடங்கும். புதிதாகக் குடியேற்றம் உண்டான நாடான அமெரிக்காவில் எல்லாம் ஒன்று கலந்து, ஸான்டா க்ளாஸ் உருவானார் என்பது ஒரு சாரார் கருத்து. டச்சு நாட்டினரின் "சிண்டர் க்ளாஸ்" வேகமாகக் குழந்தைகளால் உச்சரிக்கப் படுகையில் "சாண்ட்டி க்ளாஸ்" என தொனித்து, பின் "சாண்டா கிளாசாக" நிலை கொண்டுவிட்டது என்பது மற்றொரு சாரார் கருத்து.

சாண்டா கிளாசின் இன்றைய உருவம் பலவேறு மாறுதல்களுக்குப் பிறகு உருவானது. இந்த உருவத்திற்கான வருணனை, 1823ம் ஆண்டில் க்ளெமெண்ட் க்ளார்க் மூர் என்பவர் தமது குழந்தைகளுக்காக எழுதிய ஒரு பாட்டில் இருந்து எடுக்கப் பட்டது. இது "சாண்டா க்ளாஸ் (செயிண்ட் நிகோலஸ்) இரவு நேரத்தில் வருவார். இவர் மகிழ்ச்சியும் வேடிக்கையும் நிறைந்தவர். எட்டுக் கலைமான்களால் இழுக்கப்படும் வண்டியில் வருபவர். கிறிஸ்மசுக்கு முதல் நாள் இரவு குழந்தைகளுக்குப் பரிசுகளுடன் வருவார்" என்றெல்லாம் குழந்தைகளுக்குச் சொல்லும் விதமாக எழுதப்பட்ட பாடல்.

இதன் அடிப்படையிலும், வாஷிங்டன் இர்விங் என்பவர் எழுதிய "செயின்ட் நிகோலஸ்" என்ற நூலின் அடிப்படையிலும் கி.பி 1863ம் ஆண்டு முதல் தாமஸ் நஸ்ட் என்ற ஓவியர் சான்டா கிளாசின் உருவங்களை தமது பத்திரிக்கையில் விதவிதமாக வரைந்து வந்தார். இதன் பிறகும் பல்வேறு பத்திரிகைகளில், சான்டா க்ளாஸின் பல விதமான தோற்றங்கள் தொடர்ந்து கலைஞர்களால் உருவாக்கப் பட்டு வந்தன.

கடைசியாக 1930ம் ஆண்டு இன்று புகழ் பெற்று விளங்கும் சிவப்பு நிறக்கோட்டு, சிவப்புத் தொப்பி, கையில் பரிசுகள் நிரம்பிய மூட்டையுடன் கூடிய கிறிஸ்துமஸ் தாத்தாவின் உருவம் நிலை பெற்றது. கிறிஸ்மஸ் தாத்தா உண்மையோ, மாயையோ? ஆரம்பத்தில் சொன்ன மாதிரி, நல்ல குழந்தையாக இருந்தால்தான் பரிசு என்ற விதியின் மூலம் நல்ல பழக்க வழக்கங்களை சிறுவர் சிறுமியர் மத்தியில் கொண்டு வரவும், குழந்தைகளைப் பண்டிகை நாளன்று அவர்களை அதிசயத்தில் ஆழ்த்தவும் பெற்றோர்கள் கிறிஸ்துமஸ் தாத்தாவின் பெயரைப் பயன்படுத்தி வருகின்றனர் என்று கொள்ளலாம்.

தாமே தம் பிள்ளைகளுக்குப் பரிசு தருவதை விட, கிறிஸ்மஸ் தாத்தாவின் பரிசு என்று சொல்லி பரிசளிப்பது பெற்றோருக்கும் அதிக மகிழ்ச்சியை உண்டாக்குகிறது. ஏனெனில் குழந்தைகளின் ஆனந்தம்தானே பெற்றவர்களுக்குப் பேரின்பம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# வலி நிவாரணிகள்; நல்லதும் கெட்டதும்

வலி நிவாரணிகள் (Pain Killers) பற்றி நிறையத் தப்பபிப்பிராயங்கள் இருக்கின்றன. வெளிநாட்டிலிருந்து வந்த நபர் ஒருவர் கடுமையான இடுப்புவலியால் துன்பப் பட்டுக்கொண்டிருந்தார். ஆனால் தனக்கு Pain Killer மருந்து வேண்டவே வேண்டாம் என அடம்பிடித்தார்.

அதே வேளை முழங்கால் வலியுள்ள ஒரு அம்மா Diclofenac Sodium என்ற வலிநிவாரணி மாத்திரையை எந்த மருத்துவரின் சிபார்சுமின்றி மாதக்கணக்கில் தானாகவே உபயோகித்துக் கொண்டிருந்தார்.
இருவரும் தவற்றையே செய்கிறார்கள்.

வலிநிவாரணிகள் (Pain Killers) எனப் பொதுவாக அழைத்தாலும் இவை ஆங்கிலத்தில் Non-steroidal anti-inflammatory drugs என்றே மருத்துவத்தில் அழைக்கப்படுகிறது. சுருக்கமாக NSAID என்பார்கள். ஸ்டிரொயிட் அல்லாத வலிநிவாரணிகள் எனலாம். பொதுவாக வலிநிவாரணி என அழைத்தாலும் இவை முக்கியமாக மூன்று வகைகளில் பயன் தருகின்றன.

இவை வாயினால் உட்கொள்ளக் கூடிய மாத்திரைகளாகவும், சிரப் மருந்துகளாகவும், கூட்டுக் குளிசைகளாகவும் (Capsules) கிடைக்கின்றன. அதேவேளை மலவாயிலில் உட்செலுத்தும் மருந்துகளாக (suppository) மற்றும் ஊசி மருந்துகளாகவும் (Injections) அவசியமானபோது மருத்துவர்களால் உபயோகிக்கப்படுகின்றன. மருத்துவப் பயன்கள் இவை பலவகையான மருத்துவப் பிரச்சனைகளுக்கு அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன.

- வலி னி குத்து, வலி, உளைவு, நோ எனப் பலவாறு அழைக்கப்படும் எல்லா வலி சார்ந்த அசௌகரியங்களையும் குறைக்கினறன. தசைப்பிடிப்புகள், தலை-வலி, உடல்வலி, மாதவிடாய்க் குத்து, வயிற்று வலி, சிறுநீரகக் குத்து போன்ற அனைத்தையும் நீக்கும் ஆற்றல் இவற்றிற்கு உண்டு.
- காய்ச்சலைத் தணிக்கவும் இவை பயன்படுத்தப்படுகிறன.
- அழற்சியைத் தணிக்க உதவும். உதாரணமாக மூட்டு வாதங்களின் (Rhematoid Arthritis) போது அவை அழற்சியுற்று வீங்கிச், சிவந்து, வலியைக் கொடுக்கும். இந்த அழற்சியைத் (inflammation) தணிக்கும் ஆற்றல் வலிநிவாரணிகளுக்கு உண்டு.
- மாதவிடாயின் போது கடுமையான குருதிப் பெருக்கு இருந்தால் அதைக் கட்டுப்படுத்தும் ஆற்றலும் இவைக்கு இருக்கிறது.

எனவே இவை மிகுந்த பயனுள்ள மருந்துகள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆயினும் அவற்றை எழுந்தமானத்திற்கு உபயோகிக்கக் கூடாது. அவற்றிற்கு பல பக்க விளைவுகள் உள்ளன. அதிகம் ஏற்படும் பக்க விளைவுகள்

- நெஞ்செரிப்பு
- இரைப்பைப் புண் சிலவேளைகளில் ஏற்படும் பக்க விளைவுகளாவன இரைப்பையில் ஏற்படும் புண்கள் மோசமாகி பின்வரும் விளைவுகள் ஏற்படலாம்.
- இரைப்பைப் புண்ணிலிருந்து இரத்தம் கசிதல்
- இரத்தசோகை - அவ்வாறு தொடர்ந்து இரத்தம் கசிவதால் ஏற்படும்
- இரைப்பையில் அல்லது உணவுக் கால்வாயில் துவாரம் விழுதல்.

மிகக் குறைவாக ஏற்படும் பக்க விளைவுகளாவன;

- உயர்இரத்த அழுத்தம்
- இருதய வழுவல் (Heart Failure)
- மாரடைப்பு

சிறுநீரக வழுவல், ஈரல் பாதிப்பு போன்ற மிக ஆபத்தான விளைவுகளையும் ஏற்படுத்தலாம். ஆனால் மிகக் குறைவாகவே இத்தகைய பாதிப்பு ஏற்படுகிறது. ஏற்கனவே சிறுநீரக அல்லது ஈரல் நோய் இருப்பவர்களே அத்தகைய பாதிப்பிற்கு உள்ளாகிறார்கள்.

எனவே இத்தகைய மருந்துகளை மருத்துவ ஆலோசனை இன்றி உபயோகிப்பது நல்லதல்ல. அவ்வாறு உபயோகிக்கும்போதும் சிபார்சு செய்ததை விட அதிக காலத்திற்கு உபயோகிக்கக் கூடாது.

அவதானம் தேவைப்படுவோர்
கீழ்க்கண்ட பாதிப்புள்ளவர்கள் வலிநிவாரணிகளை உபயோகிப்பதில் மேலதிக அவதானம் தேவை. இல்லையேல் இரைப்பை புண் ஏற்படும் ஆபத்து அதிகமாகும்

- ஏற்கனவே நெஞ்செரிப்பு, புகைச்சல், வயிற்று வலி போன்ற உணவுக் கால்வாய்ப் பிரச்சனை உள்ளவர்கள்
- நீரிழிவு, உயர்இரத்த அழுத்த நோய், இருதய நோயுள்ளவர்கள்
- 65 வயதிற்கு மேற்பட்டவர்கள்
- புகைத்தல், அதிக மது பாவனையாளர்கள்
- அதிக அளவிலும், நீண்ட காலத்திற்கும் வலிநிவாரணி உபயோகிப்பவர்கள்

ஆஸ்த்மா நோயை சில தருணங்களில் தீவிரமாக்கலாம் என்பதால் அவர்கள் வலிநிவாரணிகளை அவதானத்துடன் உபயோகிக்க வேண்டும்.

கர்ப்பமாயிருக்கும்போதும், கர்ப்பம் தரிப்பதை எதிர்நோக்கியிருக்கும் காலங்களிலும், பாலூட்டும் காலத்திலும் மருத்துவ ஆலோசனை இன்றி உபயோகிக்கக் கூடாது.

பல நாடுகளில் பின்வரும் வலிநிவார ணிகள் naproxen and aspirin. மருத்துவ ஆலோசனையின்றி நோயாளிகள் தாங்களே வாங்கி உபயோகிக்க முடியும்.

ஆயினும் diclofenac, indomethacin, mefenamic acid, meloxicam> celecox-ib, nabumetone போன்றவற்றை மருத்துவ ஆலோசனையின்றி உபயோகிக்க முடியாது.

வலிநிவாரணிகளை உபயோகிப்பதில் சிக்கல் உள்ளவர்கள் பரசிட்டமோல் (Paracetamol) மாத்திரைகளை பயமின்றி உபயோகிக்க முடியும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# சிலி சுரங்கத் தொழிலாளர்களின் மீட்பு மனிதநேயத்தின் வெற்றி
# Chilean Miners Rescue Triumph of Humanity

சிலி நாட்டின் வடக்கே சன்யோசே என்ற இடத்திலுள்ள தங்க, செப்பு சுரங்கத்தில் கடந்த ஒக்டோபர் 12-13ம் திகதியன்று சுரங்கத்துள் 68 நாட்கள் சிக்குண்டு இறந்து விட்டனர் எனக் கருதப்பட்ட 33 தொழிலாளர்களை சூரிய வெளிச்சத்துக்கு திரும்பவும் கொண்டு வந்த காட்சியை உலகம் முழுவதும் உள்ள கோடானு கோடி மக்கள் தொலைக்காட்சியில் பார்த்து வியந்த அனுபவம் ஏற்பட்டது. எங்கே கடைசித் தொழிலாளி வெளியே வருவதற்கு முன்பு ஏதாவது அசம்பாவிதம் நடந்து விடுமோ என எல்லோரும் தொலைக்காட்சிப் பெட்டியின் அண்டையிலேயே மூச்சைப் பிடித்தபடி காத்திருந்தனர்.


ஜுலை 20, 1969 இல் நீல் ஆம்ஸ்ரோங் மனிதனின் கால் சுவட்டை சந்திரனில் பதித்த பொழுது எவ்வாறு மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தில் மூழ்கினார்கள் என்பதை நாம் மறக்கவில்லை. அதே நிலைதான் திரும்பவும் 40 ஆண்டுகளின் பின்பு மனித இனத்திற்கு ஏற்பட்டது. இற்றைவரை உலகப்படத்தில் ஒரு கீற்றாக காணப்பட்ட சிலி நாடு இந்த மனித நேயத்தின் வெற்றிச் சாதனைக்குப் பின்பு எல்லோர் வாயிலும் உச்சரிக்கப்படும் ஒரு பெருமை மிக்க நாடாக மாறிவிட்டது.

உலகத்திலேயே வறுமை மிக்க நாடுகளில் ஒன்றாக சிலி நாடு காணப்படுகின்றது. தனிமனித வருமானத்தில் இது உலகில் 51வது இடத்தைப் பிடிக்கிறது. வடக்கே அட்டகாமா பாலைவனத்தையும், தெற்கே பனி கண்ட மான அந்தாட்டிக் கண்டத்தையும், இந்த நீண்ட ஒடுங்கிய நாடு எல்லைகளாகக் கொண்டுள்ளது. ஒரு முனையில் அதிவெப்பத்தையும், வரட்சியையும், மறுமுனையில் உறைந்த பனிக்கட்டிகளையும் கொண்ட ஒரு அபூர்வ புவியியல் அமைப்பை இங்கு நாம் காண்கிறோம்.

ஏழு இலட்சத்து 56 ஆயிரத்து 950 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட சிலி நாட்டில் 16 லட்சத்து 958 மக்களே வாழ்கின்றனர். அடிக்கடி நிலநடுக்கங்களைச் சந்திக்கும் இந்நாட்டில் பாரிய நிலநடுக்கங்களால் உயிர் இழப்புகள் ஏற்படுவது சகஜமாகிப் போய்விட்டது. தங்கச் சுரங்கங்களும், தாமிரச் சுரங்கங்களும் இங்கு அதிகளவில் காணப்படுவதால் இவற்றிலேயே இந் நாட்டின் பொருளாதாரம் தங்கியுள்ளது. அபிவிருத்தி அடைந்த, தொழில்நுட்பத்திலும், விஞ்ஞான வளர்ச்சியிலும் முன்னணி வகிக்கும் நாடுகள் தம்மால் எதுவும் முடியும் என இறுமாப்பு அடைந்துள்ள விஞ்ஞானிகள் மலிந்த நாடுகள், வல்லரசுகள் என்ற பெயர் வாங்கிய நாடுகள் சாதிக்க முடியாத ஒன்றை இந்த வறிய நாடு சாதித்து விட்டது. இதற்கெல்லாம் மூலகாரணம் இந்நாட்டின் ஜனாதிபதி செபஸ்ரியான் பினேரா என்று கூறினால் மிகையாகாது. இவ்விபத்து ஏற்பட்ட நேரத்தில் ஈகுவடோர் சென்றிருந்த ஜனாதிபதி உடனடியாகவே நாடு திரும்பினார். தனது நாட்டுப் பிரஜை ஒருவராவது மரணிக்காத வகையில் மீட்புப் பணிகளை மேற்கொண்டார்.

அந் நாட்டு அரசாங்கமும், அதிகாரிகளும் ஒவ்வொரு உயிரையும் காப்பாற்றி விடவேண்டும் என்ற ஓர்மத்துடனும், உறுதியுடனும், பற்றுதலோடும், பக்தியோடும் செயலாற்றினார்கள். 620 மீற்றர் ஆழத்தில் அகப்பட்ட மனித உயிர்களை வெளியே கொண்டு வருவது என்பது இமாலயச் சாதனை என்றே கூறவேண்டும்.

இந்த இமாலயச் சாதனையை கொண்டாடும் நேரத்தில் சுரங்கத் தொழிலாளரின் அவல வாழ்க்கையை நோக்கினால் அவர்கள் மேல் ஏற்பட்டுள்ள ஆதரவு அதிகரிக்கும். உலகில்




கிட்டத்தட்ட 13 மில்லியன் மக்கள் சுரங்கத் தொழிலாளர்களாக வேலை செய்கிறார்கள். இதில் ஒரு மில்லியன் பால்ய தொழிலாளர்களும் அடங்குவர். உலகிலேயே அதிக அபாயம் நிறைந்த தொழில்களில் ஒன்றாக சுரங்கத் தொழில் கருதப்படுகிறது. வேலை சம்பந்தமான கொடிய நோய்களுக்கும், அகால மரணங்களுக்கும் இத் தொழில் மூலகாரணமாக அமைந்துள்ளது. கசம், நுரையீரல் கான்சர், கறுப்பு நுரையீரல் நோய், மூச்சுக் கோளாறுகள் இத் தொழிலாளர்களின் உயிர்களை இளம் வயதிலேயே குடிகொள்கின்றன.

இதனைவிட உபகரணங்கள் தொழில் செய்யாமல் போவதாலும், சுரங்கங்களின் கூரைகள் இடிந்து விழுவதாலும், இரசாயனப் பொருட்களின் நச்சுத் தன்மையாலும் அன்றாடம் சுரங்கத் தொழிலாளர்கள் மரணிப்பது உலகில் கணக்கில் எடுக்கப் படாத விடயமாகவுள்ளது. தற்காலத்தில் முகமூடிகள், மூச்சு விடுவதை சுலபமாக்கும் உபகரணங்கள், இயந்திரங்களை அடிக்கடி பழுதுபார்த்து இயங்கும் நிலையில் வைத்திருத்தல், அளவான கட்டுப்பாட்டுடன் கூடிய வேலை நேரங்கள் அமுலில் வந்துள்ள போதிலும் வறுமை மிக்க நாடுகள் ஆகிய தென் அமெரிக்க நாடுகள், ஆசிய நாடுகள், ஆபிரிக்க நாடுகள் இவற்றை பெரிதாக அமுல்படுத்தவில்லை. வறுமை காரணமாக தொழிலாளர்களும் தங்கள் உரிமைகளுக்காக வாதாடுவதில்லை. San Jose – Copper + Gold Mine க்குப் பொறுப்பான Empire Minerve Sebastian என்ற நிறுவனம் 2004-2010க்கு இடைப்பட்ட காலத்தில் 42 முறைகள் சுரங்கப் பாதுகாப்பு விதிகளை மீறியதாக குற்றம் சாட்டப்பட்டது.

2007ல் ஒரு சுரங்கத் தொழிலாளியின் மரணத்தின் பின்பு இது தற்காலிகமாக மூடப்பட்டும் இருந்தது. இப்பொழுது மீட்கப்பட்ட தொழிலாளர்களில் பலர் தாங்கள் ஏற்கனவே பலமுறை கூரை விழலாம் என்ற அச்சத்தை தெரிவித்திருந்த போதிலும் ஒருவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் கூறியுள்ளனர். இச் சுரங்கத்தில் நடைபெறும் grid mining என்பது சுரங்கத் தொழிலிலேயே அதிக லாபம் ஈட்டக் கூடிய வகையைச் சேர்ந்தது. ஆனாலும் அதே நேரத்தில் மிகவும் அபாயகரமானதும் கூட. அதற்காக இச் சுரங்கத் தொழிலாளர்களுக்கு 20% அதிக சம்பளமும் வழங்கப்பட்டது.

சுரங்கத் தொழிலால் சூழலும் மாசு அடைகிறது. நிலத்திலும், நீரிலும் நச்சுத் தன்மையுடைய அமிலங்கள் போய் சேருவதால் மண் அரிப்பு, காடுகளில் பறவைகள் மிருகங்களின் குடியிருப்புகளும் அழிக்கப்படுதல் முதலிய சூழல் மாசு அடையும் செயல்கள் நடைபெறுகின்றன. மனித சமூகத்திற்கு பலவிதமான தீங்குகளை சுரங்கத் தொழில் ஏற்படுத்தினாலும் பில்லியன் டாலர்களை ஈட்டிக் கொடுக்கும் லாபகரமான ஒரு தொழிலாக இது இருப் பதால் இதன் மகத்துவம் ஒரு பொழுதும் குறையாது. தொழிலாளர்களுக்காக தொழிற்சங்கங்கள் இயங்கினாலும் அவை வெற்றிகரமாகத் தொழிற்படுவதில்லை.

இன்று சிலி நாட்டில் நடத்தப்பட்ட மீட்புப் பணிகள் உலகளாவிய ரீதியில் இந் நாட்டினரின் மேல் உள்ள நல்லெண்ணத்தை அதிகரித்துள்ளதால் இத் தொழிலாளர்களுக்கு ஏன் உரிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்ற கேள்வியை மறைத்து விட்டது. இந்த மீட்பு நடவடிக்கையில் கற்ற பாடங்கள் சுரங்கத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு வழங்க நடவடிக்கைகள் ஏற்படுத்துவதற்கு ஒரு உந்துகோலாக அமையும் என்பது நிச்சயம்.

சுரங்கத்திற்கு அருகாமையிலேயே முகாம் இட்டு முழு நம்பிக்கையுடன் பல →

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

## 20 ஆண்டுகள் பூர்த்தி மலர்
## டிசம்பர் 17வரை கட்டுரைகள் ஏற்கப்படும்

1991ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தனது முதலாவது இதழை விரித்த 'தமிழர் தகவல்' தற்போது இருபதாவது ஆண்டில் நடை பயில்கின்றது. இன்னும் நான்கு மாதங்களில் - 2011 ஜனவரியில் இருபது வயதைப் பூர்த்தி செய்வது இந்த மண்ணில் ஒரு வரலாற்றுப் பதிவாக அமையும்.

கனடிய தமிழ் ஊடகப் பயணத்தில், தொடர்ச்சியாக உயிரோட்டமாக சமூகத்துடன் இணைந்து வளர்ந்து இருபது ஆண்டுகளைப் பக்குவமாகப் பூர்த்தி செய்யும் முதலாவது ஊடகம் என்னும் உயரிடம் தமிழர் தகவலுக்கு உரியது. இதனையிட்டுக் கனடியத் தமிழர் நிச்சயம் பெருமையடைவர்.

இந்த மண்ணில் வாழும் தமிழரின் மதிப்புக்குரிய ஓர் அடையாளமாகத் திகழும் 'தமிழர் தகவல்' இருபதாவது ஆண்டு மலர், 2011 பெப்ரவரியில் வெளிவரவுள்ளது. இதற்கான பணிகள் துரிதமாக நடைபெறுகின்றன

முன்னைய ஆண்டு மலர்களைவிட தோற்றத்தில் முற்றிலும் வித்தியாசமானதாகவும், பக்க வடிவமைப்பில் முன்னரிலும் கவர்ச்சியானதாகவும், உள்ளடக்கத்தில் மேலும் ஆழமானதாகவும் அமையவிருப்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் உங்களுக்கு அறியத் தருகின்றோம்.

மலருக்குரிய கட்டுரைகளும் மற்றும் படைப்புகளும் உங்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றது. தமிழர் தகவல் ஒரு செய்தி ஏடல்ல; இலக்கியச் சஞ்சிகையுமல்ல. தகவல்களை மட்டுமே தருவதற்காக அதன் பெயர் பூண்டு வெளிவரும் மாத சஞ்சிகை. எனவே, இதில் வெளிவரும் ஆக்கங்கள் எவ்வகையானதாக இருக்க வேண்டுமென்பதைப் புரிந்து கொள்ளலாம்.

தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் எழுதலாம். பிரெஞ்சு மொழியிலான படைப்புகளும் ஆண்டு மலருக்கு வரவேற்கப்படுகின்றது. சாதாரண கட்டுரைகள் 900 சொற்களுக்கு மேற்படாது இருக்க வேண்டும். ஆய்வு சம்பந்தமான கட்டுரைகள் 1700 சொற்கள் வரையானதாக இருக்கலாம். குறிப்பிட்ட சிலர் மட்டும்தான் தமிழர் தகவலுக்கு எழுதலாம் என்ற வரையறை எதுவும் கிடையாது. விரும்பும் எவரும் எழுதலாம். தகுதியானவை பிரசுரமாகும்.

இளையோர்/மாணவர்களிடமிருந்து முன்னைய ஆண்டுகளைவிடக் கூடுதலான படைப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றது.

2010 டிசம்பர் மாதம் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை ஆக்கங்கள் ஏற்கப்படும். தபாலில் அனுப்ப வேண்டிய முகவரி:

20th Anniversary Issue
P.O. Box - 3, Station - F
Toronto, Ontario.
M4Y 2L4

மின்னஞ்சல் முகவரி: tamilsinfo@sympatico.ca

நாட்களைக் கழித்த உறவினர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். இருண்ட அறைகளுக்குள் மனரீதியான அழுத்தங்கள் ஏற்படலாம். பூமிக்கு அடியில் நிலவும் வெப்பம், தனிமை எதிர்மறை எண்ணங்கள் யாவும் தற்கொலை உணர்வைத் தோற்றுவிக்கக் கூடியவை. இத் தொழிலாளர்களின் உள உறுதி சீர்குலையா வண்ணம் பாதுகாக்கும் பொறுப்பை அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா கவனித்துக் கொண்டது. முதலில் பீனிக்ஸ் என்ற கப்சியூல் பரீட்சார்த்த ரீதியில் ஆட்கள் ஒருவரும் இல்லாமல் பல தடவைகள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. மருத்துவ நிபுணர் ஒருவரும், சுரங்கம் பற்றிய ஆழமான அறிவுடைய ஒரு நிபுணரும் நிலத்தின் அடியில் சென்று ஒவ்வொரு தொழிலாளராக அனைவரையும் வெளியேற்றினார்கள். இவ்வளவு துாரத்திற்கு எவ்வளவு சவால்களை எதிர்கொண்டு இந்தப் பெரும் பணியை ஒரு வறிய நாடாகிய சிலி சாதித்துள்ளது என்பதனை நோக்கும் இடத்து எம்மை அறியாமலேயே எங்கள் தாய்நாட்டில் நடக்கும் மனிதாபிமானமற்ற செயல்களை ஒப்பிடாமல் இருக்க முடியவில்லை. இது போன்ற ஒரு சம்பவம் எம் நாட்டில் நடந்திருக்குமேயானால் சுரங்கத்துறை வாயில் சமாதியாகக் கருதப்பட்டு தொழிலாளர்களை நினைவு கூரும் விதத்தில் கல்லறை அமைக்கப் பட்டிருக்கும். மனித உயிருக்கு மதிப்புக் கொடாத எங்கள் நாட்டில் அரசாங்கப் படைகளாலேயே உயிர்கள் பறிக்கப்பட்டன. அங்கு மனிதநேயம் வேரறுந்துவிட்டது.

இயற்கையின் சீற்றத்திலிருந்தோ, அரசின் சீற்றத்திலிருந்தோ மக்களை மீட்பதாகிய மனிதநேயம் அந்த நாட்டில் நிலைநாட்டப்பட வேண்டும். சிலி நாட்டின் ஜனாதிபதி செபஸ்ரியான் பினேரா தனது நாட்டுப் பிரஜை ஒருவர்தானும் மரணிக்க இடம் தராத வகையில் மீட்புப் பணிகளை முடுக்கி விடச் செய்தார். நாள் தவறாது ஒவ்வொரு நாளும் மீட்புப் பணிகள் நடைபெறும் இடத்திற்குச் சென்று அதனை மேற்பார்வையிட்டார். சுரங்கத்தினுள் அடைபட்டுக் கிடந்த தொழிலாளர்களோடு தொடர்பு கொண்டார். ஒவ்வொரு தொழிலாளியும் வெளியே கொண்டு வரப்பட்ட போது முதலில் அவர்கள் தமது மனைவி, பிள்ளைகளைக் கட்டியணைத்து உரையாடிய பின்பே தான் அவர்களோடு சென்று உரையாடினார். இவையெல்லாம் எவ்வளவு துாரம் அவர் சிந்தித்துச் செயலாற்றினார் என்பதையே காட்டுகின்றன. 33 வறுமையில் வாடும் சாதாரண தொழிலாளர்களின் உயிர்களை மரணப் பிடியில் இருந்து விடுவிப்பதற்கு சிலி நாட்டு அரசின் தலைவர் செபஸ்ரியன் பினேராவின் முயற்சியே காரணமாக அமைந்தது. ஒரு தனிமனிதனின் மனிதநேயத்தின் வெற்றிக்கு இதைவிட வேறு அத்தாட்சி தேவையில்லை. எங்கள் நாட்டிலும் மனிதநேயம் உயிர் பெறுமா? ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவில் தண்ணீர் அதிகம்!

பயன்படுத்தக் கூடிய அளவிலான தண்ணீர் நிலவில் நிறைய உள்ளது. தனக்கென தனி நீர் கட்டமைப்பையும் நிலவு கொண்டுள்ளதாக நாசா அறிவித்துள்ளது. சந்திரயான் விண்கலத்தின் உதவியால் கடந்த ஆண்டு சந்திரனில் தண்ணீர் இருப்பதைக் கண்டுபிடித்தது நாசா. அதன் பின்னர் அது தொடர்பான ஆய்வுகள் முடுக்கி விடப்பட்டன.

தற்போது நிலவில் பயன்படுத்தக் கூடிய அளவுக்கு தண்ணீர் நிறைய உள்ளதாக நாசா தெரிவித்துள்ளது. இதுகுறித்து நாசா மேற்கொண்ட ஆராய்ச்சியில், நிலவின் தரைப் பகுதியில், நிறைய தண்ணீர் உள்ளது. அது பயன்படுத்தக் கூடிய வகையில் உள்ளது. தனக்கென தனி நீர் கட்டமைப்பையும் நிலவு கொண்- டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்பு கணிக்கப்பட்டதை விட அதிக அளவிலான நீராதாரம் நிலவில் உள்ளதும் தெரிய வந்துள்ளது. சில இடங்களில் இந்த தண்ணீர் பனிக்கட்டி வடிவில் காணப்படுகிறது. நிலவி-லிருந்து விண்கலம் கொண்டு வந்த சில பகுதிகளில் சூரிய வெளிச்சமே பல்லாயிரம் ஆண்டுகள் படாதது தெரியவந்துள்ளது. இதனாலேயே இங்குள்ள நீர், பனி கட்டிகளாக மாறியுள்ளது.

அந்நீர் மிகவும் தூய்மையானதாக உள்ளது என்றும் நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதேவேளை, நாசாவின் ஆராய்ச்சித் திட்ட முதன்மை ஆய்வாளர் அந்தோனி கொலபிரெட் கூறுகையில், எதிர்காலத்தில் பனிக் கட்டிகளை தண்ணீராக மாற்றி நிலவில் மனிதன் வசிக்க முடியுமா? என்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் நிலவில் மிக அதிக அளவில் கிடைக்கும் ஹைட்ரஜன், அமோனியா, மீத்தேன் வாயுக்களை எரிபொருளாக மாற்றி வாழ்வது குறித்த ஆராய்ச்சியும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. நிலவில் காணப்படும் வாழ்வியல் சூழல் மற்றும் அங்கு நிலவும் தட்ப வெப்பம் உள்ளிட்டவை குறித்தும் ஆராயப்படுகிறது.

நிலவில் தண்ணீர் உருவானது எப்படி, அங்கு பனிக் கட்டிகள் அதிக அளவில் காணப்படுவது எதனால் என்பது தொடர்பான ஆராய்ச்சிகள் இப்போது தீவிரமாக நடைபெற்று வருகின்றன என்றார்.



அ. முத்துலிங்கம்

# நோட்டுப் புத்தகம்

இந்த மாதம் நல்ல மாதம். பரிசுகள் கிடைக்கும் மாதம். மூன்று பரிசுகள் கிடைத்தன. என் மகள் ஒரு நோட்டுப் புத்தகம் பரிசு தந்தார். எழுத்தாளருக்கு இதை விடச் சிறந்த பரிசு என்ன? சிலவேளைகளில் புத்தகங்களும் பரிசாக எனக்கு கிடைத்திருக்கின்றன. ஆனால் ஒரு பிரச்சினை உண்டு. அவை வார்த்தைகளால் நிரம்பியிருக்கும். அவற்றை எல்லாம் படிக்கவேண்டும். நோட்டுப் புத்தகம் என்றால் ஒற்றைகள் வெறுமையாக இருக்கும். ஒன்றுமே படிக்கத்தேவை இல்லை. உங்களுக்கு தோன்றினால் நீங்களே ஏதாவது எழுதலாம். எவ்வளவு அருமையான கண்டுபிடிப்பு.

பார்சலைப் பிரித்துப் பார்த்த நான் ஆச்சரியப்பட்டேன். அது சாதாரண நோட்டுப் புத்தகம் அல்ல. மோல்ஸ்கீன் (அழடநளமமைெ) என்ற பிரசித்தமான நோட்டு வகை. இதிலே விசேஷம் என்னவென்றால் இதன் அட்டை தொட்டவுடன் வழுக்கும் தன்மையுடன், மூலைகள் கூராக இல்லாமல் மழுங்கடிக்கப்பட்டு இருக்கும். தாள்கள் வெண்ணெய் நிறத்தில் வழுவழுப்பாக கோடு அடித்து காணப்படும். முக்கியமான சிறப்பு ஒன்றும் உண்டு. மேசையில் நீங்கள் நோட்டில் எழுதிக்கொண்டு இருக்கும்போது யாராவது கதவு மணியை அடித்தால் நோட்டை அப்படியே விட்டு விட்டு எழுந்து போகலாம். அது விட்டதுமாதிரி தட்டையாக உங்களுக்காக காத்திருக்கும். ஒற்றைகள் மற்ற நோட்டுப் புத்தகங்கள் போல தானாக மூடிக்கொள்ளாது. ஒன்றோடு ஒன்று ஒட்டாது. மற்றொரு விசேஷம் அதன் ரப்பர் நாடா. நீங்கள் கடைசியாக எழுதிய பக்கத்தை நாடாவை இழுத்து அடையாளமாக மாட்டலாம். விலையைக் கேட்டால் வீணாக எழுதி அதை பழுதாக்க மாட்டீர்கள்.

ஒரு காலத்தில் எழுத்தாளர்களும் பிரபலர்களும் மோல்ஸ்கீன் நோட்டுப் புத்தகத்தை உபயோகித்தார்கள். ஒஸ்கார் வைல்டு, வின்செண்ட் வான்கோ, ஓவியர் பிக்காசோ, எழுத்தாளர் ஹெமிங்வே போன்றவர்கள் இதையே பயன்படுத்தினார்கள். இந்த நோட்டுப் புத்தகத்தை ஒரு பிரெஞ்சுக் கம்பனி யந்திரம் பாவிக்காமல் கைத்தொழில் போல தயாரித்தது. இடையில் சிறிது காலம் இதன் தயாரிப்பு நிறுத்தப்பட்டது. பின்னர் ஓர் இத்தாலிய கம்பனி மறுபடியும் வெளியீட்டை ஆரம்பித்து அதுவும் கைமாறி தற்போது பிரெஞ்சுக் கம்பனி இதை செய்கிறது. இப்பொழுது அதன் மதிப்பு கூடி விற்பனையும் ஏறிக்கொண்டே போகிறது. 53 நாடுகளில் 14,000 கடைகளில் விற்பனையாகிறது என்று படித்தேன்.

எழுத்தாளருக்கு நோட்டுப் புத்தகம் என்பது மிகமிக அவசியம். ஹெமிங்வே போன்ற புகழ்பெற்ற எழுத்தாளர் தன்னுடைய இரட்டைக்குழல் துப்பாக்கியை விட்டுவிட்டு போனாலும் போவாரே ஒழிய மோல்ஸ்கீன் நோட்டுப்புத்தகம் இல்லாமல் வெளியே புறப்பட மாட்டார். எனக்கு இதே நோட்டுப் புத்தகம் பரிசாகக் கிடைத்துவிட்டது. விரித்து அதை தடவிப் பார்த்தேன். குழந்தையின் முழங்கைபோல மிருதுவாக இருந்தது. நான் சிறுவனாக இருந்தால் வீட்டுக்கு எடுத்துச் சென்று அம்மாவிடம் காட்டுவேன். அத்தனை அழகு. இனி தேவை ஒரு பேனா. மூடி கழற்றி பூட்டக்கூடிய நல்ல மதிப்பான பேனா. நிறுத்தாமல் வேகமாக, நன்றாக எழுதும் பேனா. தானாகவே சிந்தித்து தானாகவே எழுதினால் இன்னும் நல்லது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் *பத்தாம் பக்கம்*

# பூ.. இவ்வளவுதானா?

இதன் சரியான பெயர் என்னவென்று பலருக்குத் தெரிந்திருப்பதில்லை. தெரிந்தவர்களும் 'அயத்து மறந்துங்கூட' அப்பெயரை உதட்டோரமாவது உச்சரிப்பதுமில்லை.

பதினொரு மாதங்கள் எங்கிருந்தது என எவரையும் அக்கறை எடுக்காதிருக்க விட்டுவிட்டு மார்கழி மாதத்தில் மட்டும் தேவாலயங்கள் வீடுகள் அலுவலகங்கள் அங்காடிகள் என எங்குமே நீக்கமற நிறைந்திருந்து பார்க்கும் இடமெல்லாம் பார்க்கவைத்து வியப்பை தருவது இது. இதுவரை இலையைப் பார்த்து பூ என்று அழைக்கும் விநோதமும் இதற்குரியது.

இதன் பூர்வீகம் மெக்ஸிக்கோ. பழங்குடியினர் இதிலிருந்து செஞ்சாயம் உருவாக்கினர். ஆண்டீஸின் மகுடம் என தென்னமெரிக்கர் இதனை அழைக்கின்றனர். சுவாலை இலை மரங்கள் என்றும் சிங்க றால் மரங்கள் என்றும் சொல்லுவோரும் இருக்கின்றனர். இதற்கு நத்தார் பூ புனித பூ மார்ழி பூ அலங்கார பூ என்ற பெயர்களும் புழக்கத்தில் உள்ளது.

பெத்லகேமில் ஜேசுபிரான் அவதரித்த பொழுது வானில் தோன்றிய நட்சத்திரத்தின் அடையாளமாக இலைகள் தோன்றுவதாகவும் சிலுவையில் அறையப்பட்ட பொழுது சிந்திய இரத்தத்தை சிவப்பு நிறம் பிரதிபலிப்பதாகவும் நம்புபவர்கள் நம்புகின்றனர். 16 ம் நூற்றாண்டில் ஏழைச் சிறுமி ஒருத்திக்கு நத்தார் பரிசாக இதனை ஒரு தேவதை வழங்கியதெனவும் அதனால் அந்த வீடு சகல ஐஸ்வர்யங்களுடனும் ரட்சிக்கப்பட்டது எனவும் நத்தார் காலத்தில் அது இருக்குமிடம் இன்றும் மாட்சிமையுறும் என்பதும் ஐதீகம்.

ஒடித்தால் பால்வடியும் தாவர வர்க்கத்தை சேர்ந்தது. சிலருக்கு இதனால் தோல் அரிப்பு ஏற்படுவதுமுண்டு. பூமியில் எங்கும் இயற்கையில் இத்தாவரம் பத்து அடி உயரத்துக்கு வளரும். நஞ்சுத்தன்மை கொண்டதல்ல. எனினும் உண்ணுவதற்கும் உகந்ததல்ல. உட்கொள்வோருக்கு வாந்தி பேதி ஏற்படும் சுமார் 500 இலைகளை உண்ட 50 இறாத்தல் எடையுள்ள சிறுவன் வயிற்றுவலியால் சிறிது அவதிப்பட்டதாக ஆராய்ச்சி அறிக்கைகள் கூறுகின்றன.

கட்டிடங்களினுள் 2 அடி உயரம் வரை வளர்க்கக்கூடிய இதற்கு மனிதருக்கு இதமான சுவாத்தியம் இதமளிக்கும். ஈரலிப்பற்றிருந்தால் மட்டுமே நீர் தேவை. சிவந்த இலைகளிருக்கும் வேளைகளில் உரமிடக்கூடாது. பகலில் ஆறு மணி நேரத்துக்கெனினும் அதிக வெளிச்சமும் இரவினில் அதிக இருளும் தேவை. அப்பொழுதுதான் இலைகள் கூடுதலாக சிவப்பு நிறமாகும்.

சிவப்பு நிறத்தின் அடர்த்தி இலைகளில் அதிகரிக்க அதிகரிக்க இதன் பெறுமதியும் அதிகரிக்கும். நத்தார் காலங்களில் ஏனைய சாடிச் செடிகளிலும் பார்க்க இவற்றின் விற்பனை 85% அதிகரிக்கும். அமெரிக்கா பூராவும் இவை வர்த்தக ரீதியாக பண்ணைகளில் வளர்க்கப்பட்டாலும் கலிபோர்னியாவே முன்னணி வகிக்கின்றது. நத்தார் காலங்களில் சுமார் 90% ஏற்றுமதி அமெரிக்காவிலிருந்து உலகெங்கும் சென்றடைகின்றது. வருடந்தோறும் அண்ணளவாக 200 மில்லியன் டாலர் வருமானம் அமெரிக்கா ஈட்டுகின்றது.

இயற்கை ஆர்வலரும் ஆன்மீக சிந்தனையாரும் மெக்ஸிக்கோ நாட்டுக்கு அமெரிக்காவின் முதலாவது தூதுவருமான ஜோல் போயின்ஸெத் என்பவர் இதனை 1825ம் ஆண்டு அமெரிக்காவிற்கு அறிமுகம் செய்தார். அதனால் இதற்கு போயின்ஸெத்தியா (Pointsettia) என்ற பெயர் சூட்டப்பட்டது. அவர் மரித்த தினமாகிய மார்கழி மாதம் 12 ம் திகதி இதன் தேசியதினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

நூற்றுக்கும் மேற்பட்ட வர்க்கங்கள் இதற்கு உண்டு. இவற்றை 40 வயதுக்கும் மேற்பட்ட பெண்களே அதிகளவில் விரும்பி வாங்குவதாக கருத்துக் கணிப்பு கூறுகின்றது. செயற்கையாக இவற்றின் நிறத்தை மாற்ற முடியாது. சிவப்பு அதிக அளவிலும் வெள்ளை மஞ்சள் மென்சிவப்பு ஆகிய நிறங்கள் சொற்ப அளவிலும் நத்தார் காலத்தில் கட்டிடங்களை அலங்கரிக்கின்றன. ●

## டேவிட் மில்லர் உலக வங்கியின் ஆலோசகராகிறார்

கடந்த எழு ஆண்டுகளாக ரொறன்ரோ நகர மேயராகவிருந்த டேவிட் மில்லர் உலக வங்கியின் தலைவரது ஆலோசகர்களில் ஒருவராக நியமனம் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கூகிள் இளையத்தளத்தின் நெற்புக் கணினிகள்

பிரபல இணையத்தளமான கூகுள் நிறுவனம் தனது குறோம் இயங்கு தளத்தை (Chrome operating system) கொண்டியங்கும் நெற்புக் (netbook) கணினிகள் விற்பனைக்கு வரத் தயாராகவுள்ளது. கடந்த வருடம் நவம்பர் மாதம் குறிராம் யேங்கு தளம் அறிமுகமானது. தற்போது 'இன்வென்டெக்' எனப்படும் தாய்வான் நாட்டு நிறுவனருடன் இணைந்த இதனை உருவாக்கியுள்ளது.

ஏற்கனவே சந்தைக்கு வந்த கூகிளின் சொந்தத் தயாரிப்பான நெக்ஸஸ் என்னும் 'ஸ்மார்ட்' போன்களை விற்பனைக்கு விட்டதாயினும் அது சந்தையில் வரவேற்பைப் பெறவில்லை.

## கண்பார்வையை வழங்கும் அதிநவீன 'சிப்'

பார்வை இழந்தவர்களுக்கு பார்வையை வழங்கக்கூடிய அதிநவீன 'சிப்' ஒன்றினை ஜேதர்மனிய ஆதராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். இதன்படி, கண்களின் பின்பகுதி விழித்திரையில் 'சிப்' ஒன்று பொருத்தப்படுகின்றது. இதன் ஊடாக ஒளி கடத்தப்படும்பொழுது அது இலந்திரனியல் தூண்டல்களாக மாற்றப்பட்டு பார்வை நரம்புகளுக்குச் செலுத்தப்படுகின்றது.

பார்வையற்றவர்கள் இதன் மூலம் பொருட்களை இனங்கண்டு கொள்ளலாம். இந்த 'சிப்' எனப்படுவது 'றெடினிடிஸ் பிக்மென்டோஸா' எனப்படும் பரம்பரை கண் நோயினால் பாதிக்கப்படும் நோயாளருக்கு பெரிதும் பயனளிக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த உபகரணத்தில் 1,500 ஒளியுணர் 'ரசன்ஸர்'கள் பொருத்தப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைக்ரெயின் தலையிடியில் டிஎன்ஏ வகிக்கும் பங்கு

முதன்முறையாக மைக்ரெயின் தலையிடிக்கு பரம்பரை அலகுகள் பங்களிக்கின்றன என சர்வதேச விஞ்ஞான குழு தெரிவித்திருக்கின்றது. இதன் மூலம் மைக்ரெயின் தலையிடி வராமல் தடுக்க புதிய மருத்துவ சிகிச்சை முறைகளைக் கண்டறிய இந்த ஆராய்ச்சிகள் உதவும் என நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜேர்மன், பின்லான்ட், நெதர்லான்டைச் சேர்ந்த ஐம்பதாயிரம் பேரிடையே நடத்திய ஆய்வின்படி குறிப்பிட்டதொரு டிஎன்ஏ அலகு மூளையில் காணப்படும் ஒரு கெமிக்கலின் தன்மையைப் பாதிப்பதனால் மைக்ரெயின் தலையிடி வரும் அபாயம் தோன்றுவதாகத் தெரிய வந்திருக்கின்றது. குளூராமேற் எனப்படும் அந்த கெமிக்கலின் அடர்த்தியே இதற்கு காரணமாக அமைகின்றது எனப்படுகின்றது.

மைக்ரெயின் ஆறிலொரு பெண்களையும் பன்னிரண்டிலொரு ஆண்களையும் பாதிப்பதுடன் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் காணப்படுகின்ற செலவு கூடிய மூளை செயற்பாட்டைப் பாதிக்கும் ஒரு நோயாக இருந்து வருகிறது. உலகம் முழுவதும் கடந்த ஆண்டில் 2.6 பில்லியன் பெறுமதியான மருந்துகள் இந்தத் தலையிடிக்காக விற்கப்பட்டிருக்கின்றன.

## ஈரலும் ரொக்சின்களும்

மனித உடலில் தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்ளும் ஒரு அங்கம் ஈரலாகும். நாம் அதற்குக் கொடுக்கும் வேலைப்பளுவும் கொஞ்சமல்ல. நமது உடலில் கெமிக்கல்கள் பிளாஸ்ரிக்குகள் மற்றும் பல காரணங்களால் பல்வேறு வகையிலும் சேரும் ரொக்சின்களை ஈரலே வடிகட்டி அகற்றுகின்றது. அதனைப் பாதுகாக்க பின்வரும் முறைகளைக் கையாளலாம்.

தினமும் 6-8 கிளாஸ் தண்ணீர் அருந்துவது அவசியமாகும். கெமிக்கல்களை பாவிப்பதை சுவாசிப்பதை தவிர்த்தல் வேண்டும். ஓர்கானிக் உணவுகளை உண்பதும் பைபர் அதிகமாகக் கொண்ட உணவுகளை உடகொள்வதும் பதப்படுத்தப்பட்ட உணவுகளை தவிர்ப்பதும் அவசியம். மேலும் பின்வரும் உணவுகள் அன்ரியொக்சிடன்களை அதிகளவில் கொண்டவை.

மாதுளை, டான்டிலியன் பச்சை இலைகள், கரும் பெர்ரி பழங்கள், பீற்றுட் இலைகள். கிறீன் தேநீர், டார்க் சொக்கலேற்றுகள், கேல் இலை, தேசிக்காய் மற்றும் எலுமிச்சை போன்றவற்றை அடிக்கடி உணவில் சேர்ப்பது நல்லது.



பொன்னையா விவேகானந்தன்

## புலவர் மானம் 10

பாடல் புனைவதை மட்டுமே தம் கடமையாகக் கொண்டவரல்லர் அந்நாளில் வாழ்ந்த புலவர். தாம் வாழ்ந்த சமூகத்தின் இன்ப துன்பங்கள் எல்லாவற்றிலும் இப் புலவர் இருந்தனர். பாமரக் குடிகளோடு இணைந்துருகும் இவர்கள், அவசியம் ஏற்படுகின்ற போதெல்லாம் ஆளும் மன்னனையும் அதட்டியிருக்கின்றனர். பகைக்குப் பணியாத வேந்தர், புலவர் நாப்பிறக்கும் தமிழ் முன் தாமடங்கி நின்றனர். மக்கள் குரலாக ஒலித்த புலவர் தமிழைச் சிறுமை செய்த சிற்றின வேந்தருக்கு, வேளை வந்தபோதெல்லாம் பாடம் புகட்டியிருக்கின்றனர்.

பெருஞ்சித்திரனார் எனும் ஒரு புலவர். தமிழுக்கும் தனையாளும் தலைவனுக்கும் தவிர எவர்க்கும் தலை தாழ்த்தும் வழக்கம் இல்லாதவர். பாடிப் பரிசில் பெறுகின்றபோதும், தன்மானத்தில் சிறு களங்கம் ஏற்பட்டாலும் சீறிச் சினப்பவர். வெளிமான் எனும் ஒரு பெரு வள்ளல், தமிழ் பாடும் புலவோரையெல்லாம் பொருள் ஈந்து வாழவைக்கும் பெருங் குணத்தான். பெருஞ்சித்திரனாரின் புலமையறிந்து போற்றுபவன் இவ்வள்ளல்.

வழமைபோல் ஒருநாள் வள்ளலை நாடிப் போகின்றார் புலவர் பெருமான். பொருள் பெறப் போனவருக்குக் காத்திருந்தது அதிர்ச்சியான செய்திதான். வெளிமான் இவ்வுலக வாழ்வைத் துறந்துவிட்டான். சித்திரனார்க்கு உள்ளம் உருக்குலைந்து போயிற்று. வெளிமானின் அரியணையில் இருந்தவன் இளமான். வெளிமானின் தம்பி. மூத்தவனை நாடிவந்த புலவரின் தகுதி அறியாதவன் இவன். புலவருக்கு சுருங்கிய இதயத்தோடு சிறுபொருள் கொடுத்தான். புலவரின் தன்மானம் பீறிட்டது. இளமானின் சிறுபொருளை உதறிவிட்டுப் பாடுகின்றார்.

'எழுவினி நெஞ்சம் செல்கம் யாரோ...... " (புறம் 207)
இப் பாடல் வழியாக இளமானின் சிறுமையை இகழ்ந்து வருந்துகின்றார்.
இளமானால் சிறுமைப்படுத்தப்பட்ட புலவர், அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த மற்றுமொரு வேந்தனான குமணனைப் பார்க்கச் செல்கின்றார். தமிழைத் தாமாகக் கொண்ட புலவரைத் தலைமேல் வைத்துப் போற்றும் உயர் பண்பு கொண்டவன் குமணன்.
குமணனின் பேரன்பைப் புகழ்ந்து பாடுகின்றார் பெருஞ்சித்திரனார். புலவரின் செழுந்தமிழுக்குப் பெரும் பரிசாக யானை ஒன்றை வழங்கினான் குமணன். யானைதனைப் பரிசாகப் பெறுவது என்பது பெருஞ் சிறப்புக்குரியது. யானையுடன் பொருளும் பெற்றுத் திரும்பிய சித்திரனார் வறுமையில் வாடிய தன் வீட்டுக்குப் போகவில்லை.
குமணனிடமிருந்து புறப்பட்டு இளமானின் ஊருக்குப் போனார். இளமானின் சிறுமை, அவர் உள்ளத்தை வாட்டிக் கொண்டிருந்தது. தன்மான உணர்வைத் தளமாகக் கொண்ட அவரது கோபம், இளமானுக்குப் பாடம் புகட்ட வேண்டும் எனக் கூறிக்கொண்டிருந்தது.

ஊருக்கு நடுவே, இளமானின் காவல் மரம் நடப்பட்டிருந்து. ஒரு நாட்டின் ஆட்சி அடையாளங்களில் ஒன்றாகக் கருதப்படுவது காவல் மரம். அது எப்போதும் புனிதமானதாகக் கருதிப் போற்றப்படும்.
தாம் கொண்டுசென்ற யானையைப் புலவர் அந்தக் காவல் மரத்தில் கட்டினார்.
இளமானின் அவைக்குச் சென்று அவனுக்கு முன்னாலேயே இந்தச் செய்யுளைப் பாடினார்.

'இரவலர் புரவலை நீயும் அல்லை
புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்.
இரவலர் உண்மையும் காணினி இரவலர்க்கு
ஈவோர் உண்மையையும் காணினி நின்னூர்க்
கடிமரம் வருந்தக் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானை எம் பரிசில்
கடுமான் தோன்றல் செல்வல் யானே."..... புறம் 162.

நீ இரந்து வருவோரைக் காக்கின்ற புரவலனும் அல்ல. இரந்து வருவோரைக் காக்கின்ற புரவலர்கள் இல்லாமலும் இல்லை. இரவலரின் உண்மையையும் நீ அறிந்து கொள். அதுபோன்று, புரப்பவர்களின் உண்மை இயல்பையும் தெரிந்து கொள். புரவலன் குமணன் எனக்கு ஈந்த யானையை உன் கடிமரத்தில் பிணைத்துள்ளேன், காண்பாயாக. விரையும் குதிரைகளையுடைய தலைவனே, இனி நான் செல்வேன்.
நிறைவுற்ற நெஞ்சத்தோடு தம்மூர் மீண்டார் பெருஞ்சித்திரனார்.
மானம் ஒன்றே பெரிதென வாழ்தல் மாண்புடையோர் மரபு. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## முதல் மருமகள் இத்தாலி; அடுத்த மருமகள் ஸ்பெய்ன்

இந்தியாவின் நேரு குடும்பத்தில் இரண்டு இளம் காந்திகள் அரசியல் வாரிசுகளாக உள்ளனர். ஒருவர் ராஜீவின் மகன் ராகுல்; அடுத்தவர் சஞ்சேயின் மகன் வருண். ராஜீவும் சஞ்சேயும் நேரு மகள் இந்திரா காந்தியின் புதல்வர்கள்.

ராகுலும் வருணும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் எதிரெதிர் கட்சிகளில் உள்ளனர். ராகுல் காங்கிரஸின் செயலராகவிருந்தவாறு இளையோர் அணியின் தலைவராக இயங்கி வருகிறார்.

ராகுலின் தொகுதியான அமேதிக்கு அண்மையில் விஜயம் செய்த வருண், "ராகுலுக்கு வயது 40; அவர் இன்னும் இளைஞரா?" என்று கேட்டு ஒரு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளார். இதனால், தாம் விரைவில் திருமணம் புரிய இருப்பதை ராகுல் அறிவிக்க நேர்ந்தது. ஆனால் அதுவே பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதையாகி விட்டது.

ஸ்பெய்னைச் சேர்ந்த வெரோனிக்கா என்ற நீண்டநாள் காதலியை ராகுல் மணம் புரிவதைப் பதிரங்கப்படுத்திய ஊடகங்கள் "இன்றைய மருமகள் இத்தாலி; அடுத்த மருமகள் ஸ்பெய்னா" என்று கேள்வி எழுப்பியுள்ளன.

## தமிழ் மொழிபெயர்ப்புக்கு மேலும் மொழிபெயர்ப்பா?

கனடா ஒது பலவின நாடு, இதனால் முக்கிய துறைகளில் அவரவர் புரியும் மொழியில் மொழிபெயர்ப்பு வசதி வழங்கப்படுகின்றது. இதற்கென சம்பள அடிப்படையில் மொழிபெயர்ப்பாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

தற்போது வன்கூவரில் கப்பலில் வந்த தமிழர்களுக்கு மொழிபெயர்ப்புப் பணிக்கு வேறு மாநிலங்களிலிருந்தும் பலர் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இவர்களில் சிலரது தமிழ் சரியாகப் புரியாது திண்டாடுகிறார்களாம் கப்பல் தமிழர்கள்.

"எத்தனை வாட்டி உன்னைக் கப்பல்லை ஓட்டியிருக்கிறாய்?", "ஜாப்னாவிலைருந்து 'ஹெட் ஐலன்ட்' எந்தோனைப் பக்கமிருக்கு?

இப்படியான இந்தியத் தமிழால் தாயகத் தமிழர்கள் விழி பிதுங்குகின்றனர். 'வாட்டி' என்றால் 'தடவை', 'ஓட்டினாய்' என்றால் 'பயணித்தாய்', 'ஹெட் ஐலன்ட்' என்றால் 'மண்டைதீவு' என்பது எப்படிப் புரியும்?

இந்திய ராணுவம் தமிழர் தாயகத்தில் இருந்தபோது ஏற்பட்டது போன்ற அனுபவம் வன்கூவரில் கிடைக்கிறதாம்!

## ராசா என்பர் மந்திரி என்பர்.... மு.க வின் முடி சரிகிறதோ!

இந்திய அரசில் நீண்ட காலமாக இழுபறியிலிருந்த வந்த விடயம் முதற் கட்ட முடிவுக்கு வந்துவிட்டது. தி. மு. க சார்பில் மத்திய மந்திரியாகவிருந்த 'ஊழல் கேடி' ஆ. ராசா இறுதியில் ராஜினாமா செய்து விட்டார்.

ஸ்பெக்ட்ரம் வர்த்தகத்தில் ஒன்றரை லட்சம் கோடி ரூபாவை ராசா ஏப்பம் விட்டது புதிய கதையல்ல. மு. க வின் பேரன் கலாநிதி மாறனே இதனை பகிரங்கமாகக் கூறிவந்ததை மறக்க முடியாது.

அடுத்தாண்டில் தேர்தலைச் சந்திக்க இருக்கின்ற வேளையில் ராசாவை தொடர்ந்து மந்திரியாக வைத்திருக்கவே கருணாநிதி விரும்பினார். ஆனால், செல்வி ஜெயலலிதா தொடுத்த அம்பு கிழவரை ஆட்டம்காணச் செய்து விட்டது.

ராசாவால் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் பெரும் பங்கு கனிவான மொழியின் ஊடாக கோபாலபுரம் பெட்டகத்துள் சென்றதாக அ.தி.மு.க தலைமை கூறுகின்றது.

முடி ஆட்டம் காணுவதை உணரும் மு. க, இப்போது கொஞ்சம் அமத்தி வாசிக்கின்றார் என்கின்றன தமிழக ஊடகங்கள்.

**உதாசனன் உலா விருந்து**

## 'பேபி'யின் பூர்த்தி விழாவுக்கு 30,000 கிலோ பாற்பொங்கல்

கடந்த மாதம் 18ஆம் திகதி அவரது 65வது பிறந்தநாள் விழா. அதனை முன்னிட்டு மக்கள் வரிப்பணத்தில் பல கோடி ரூபா செலவில் களியாட்டம்.

இதில் முக்கியமானது, விருந்தினருக்கு வழங்கப்பட்ட சாதனை படைக்கும் பாற்பொங்கல். இதற்கு 12,000 கிலோ வெள்ளை அரிசி, 1,500 தேங்காய், 300 கிலோ கசுக்கொட்டை என்பன பயன்படுத்தப்பட்டன.

இதனை விட முந்திரிகை, வாசமிகு திரவியங்கள் என்று வேறு பல. மொத்தமாக 30,000 கிலோவில் இந்த பாற்பொங்கல் தயாரிக்கப்பட்டு, கின்னஸ் சாதனை ஏற்படுத்தப்பட்டது.

இப்படித் தமது பிறந்த நாளைக் கொண்டாடிய அந்த 'பேபி'யின் பெயர் மகிந்த எனப்படும் மகேந்திர பேர்சி ராஜபக்ச. நவீன துட்டகைமுனு, புதிய ஹிட்லர் என்று அழைக்கப்படும் இவர் அடுத்த ஆறு ஆண்டுகள் ஆட்சியில் இருப்பது உறுதியாகியுள்ளது.

## அமைச்சரின் நண்பருக்கு அமைச்சரின் மனைவியின்...

சிறீலங்காவின் பிரதி அமைச்சர்களில் ஒருவரான மகிந்தா அளுத்கமகேயின் மனைவி, தமது கணவரின் நண்பர் ஒருவரை கணவர் முன்னிலையில் வைத்து அடித்து உதைத்துள்ளார். இது நடந்த இடம், கொழும்பு கோல்பேஸ் ஹோட்டல்.

பிரதியமைச்சரும் நண்பரும் ரஷ்யப் பெண்ணொருவருடன் வைத்திருந்த கள்ளத் தொடர்பே இந்த அதிரடித் தாக்குதலுக்குக் காரணம்.

இந்தப் பிரதியமைச்சரே அண்மையில் யாழ்ப்பாணம் சென்ற போது இரண்டாம் தாரமாக தமிழ்ப்பெண் ஒருவரைத் தாம் திருமணம் புரிய விரும்புவதாகக் கூறியவர்.

குறிப்பு: சந்திரிகா ஆட்சிக் காலத்தில் அமைச்சராகவிருந்த நிமால் சிறிபால சில்வா தமது அமைச்சு அறைக்குள் பிரத்தியேகச் செயலாளரான இளம் பெண்ணுடன் அலங்கோலமாக இருக்கையில் மனைவியிடம் கையும் மெய்யுமாக அகப்பட்டு துடைப்பத்தால் தாக்கப்பட்டவர். இன்றும் அவர் அமைச்சராகவுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிஞர் ச.வே. பஞ்சாட்சரம்

# புற்றீசல்களாய் பொறி கிளம்பட்டும்!

'மனதாலும் சிங்களவன் மண்கைப் பற்றும்
வன்பழியே எண்ணாத தமிழர் நாங்கள்!
அநியாயம், அக்கிரமம் எம்மண் முற்றாய்
அபகரிக்கப் பட்டதெ'ன அழுகின் றோரே!
தனதுறவு, தன்னயலான், பிறனின் காணி
தமைக்கள்ள உறுதிகொண்டு கவர்ந்த லட்சம்
வினைகளது பயன்நுகர வைக்க என்றே
விதிசெய்த கொடுமைநம் போரின் வீழ்ச்சி!

'ஆண்டிருந்த சிங்களவன் மேல்பொ றாமை
அடைந்தபழி புரியாத தமிழர் எம்மைப்
பூண்டுடனே அழிப்பதெது?' என்றே சோர்வீர்!
புனிதர்நாம் அதில்!எனினும் அயலார், சுற்றம்
ஈண்டெம்முள் எள்ளளவு நிமிர்ந்திட் டாலும்
எரிச்சலுற்றுக் கால்வாரிக் குழிப றித்த
வீண்பழிகள் பலகோடி திரண்டே இந்த
வெறிப்போராய்ச் சவக்குழிக்குள் சாய்த்த எம்மை!

சிங்களவன் முதுகினிலே குதிரை யோடச்
சிறிதேனும் முயன்றறியாத் தமிழர் நாங்கள்!
எங்களினை அன்னவனுக் கடிமை யாக்கி,
எம்முதுகில் அவன்குதிரை யோட வைத்த(து)
இங்கெது'வென் றழுவோரே! சாதி சொல்லி,
எமிற்சிலரை அடிமைகளாய் வதைத்த பாவம்
சிங்களத்தின் அடிமைகளாய் நெஞ்சம் வேகும்
தீங்கிற்குக் காலான துணர்ந்து கொள்வோம்!

சிங்களவன் வளர்ச்சியுடன் ஒப்பீட் டாய்ந்தெம்
தீந்தமிழன் வளர்ச்சிக்காய் உழைக்கா நாங்கள்
எங்கள்அய லவன்,ஊரான் வளர்ச்சி யோடே
எமதெமது வளர்ச்சிகளை ஒப்பிட் டன்னார்
பங்கமுறப் பலபழிகள் செய்தே சாய்த்த
பாவத்தால் குட்டிச்சுவர் ஆகி இன்று
எங்கெல்லாம் ஏதிலியாய், நாடில் லாத
இழிகுலமாய் அலைகின்றோம்! திருந்துவோமா?

தமிழுரிமை வாதாட்டம் நடத்திக் கல்வி
தாய்த்தமிழில் கற்கின்ற உரிமை பெற்றும்
தமிழ்மொழியில் தொடர்பாடும் உரிமை பெற்றும்
தமிழில்மெய்ப் பற்றின்றி, மானம் அற்றே
எமதுரிமை பேணித்தமிழ் கையா ளாமல்
இங்கிலீசில் கல்வி,தொடர் பெல்லாம் கொள்வோம்!
தமிழரெனல் தரக்குறைவென் றெண்ணும் பாவத்
தண்டனைதான் எம்மூர்சிங் களப்பேர் ஏற்றல்!

பன்னூறு கோவில்கள் தமிழீ ழத்தில்
பார்க்குமிடம் எங்கும்,ஒரு காலம்! அந்தப்
பன்னூறு கோவில்,தே வால யத்தில்
பல்லாயி ரம்அகந்தை வழக்கு, மோதல்!
"என்பெயரில் கோவில்கள் இருப்ப தால்தான்
என்பெயரால் ஏராளம் மோதல், நாசம்!"
என்றெண்ணி இறைசீற்றம் கொண்ட தாலே,
இடிந்தநம் கோவில்களும், இனிய நாடும்!

மட்டி,மடை யன்பேதை மிலேச்சன், மூடன்
மாரெல்லாம் நல்லோர்போல் பொறுப்பில் குந்தி,
திட்டமிட்டுத் தரப்பட்ட கடமை தம்மைத்
திறம்படவே அன்புவழி ஆற்றல் விட்டு,

செட்டு,திமிர் மிக்கவராய் நடந்து மக்கள்
திட்டுகளை விடுதலைக்காம் அணிமேல் வீழ்த்தி,
விட்டதனால் மனங்கள்தம் சாபத் தாலும்
மலைபோல வளர்ந்தவெற்றி மண்கவ் விற்று!

சமகாலத் தமிழரிலே பெரும்பங் கோரைச்
சகதிசெய்யும் நோயெனிலோ புகழா சைதான்!
சமயங்களில் வெறிகிளப்பித் தலைவ ராகி,
சாதிகளின் வெறிகிளப்பித் தலைவ ராகி,
அமைகுறிச்சி வெறிதூண்டித் தலைவனாகி,
ஆக்கிப்பிர தேசவெறி தலைமை தாங்கி
தமிழர்விடு தலைச்சிந்தை சிதற டித்த
தடியர்புகழ் இச்சையாலும் சாய்ந்த தீழம்!

அரசற்ற, தனிச்சிறு பான்மை நாங்கள்!
'அணிச்சண்டை யால்மேலும் தேய்ந்தி டாமல்
ஒருசக்தி யாய்எழுந்து திடுதிப் பென்று
உரிமைப்போர் வெல்லோமேல் அழிவோம் முற்றாய்!
பொருளாதா ரம்,போர்செய் சேய்ப் பெருக்கம்
போர்க்காலம் குன்றும்! போர்நீளல் போக்க,
விரைந்துவெல்ல, முழுமூச்சாய் யாவும் நல்க
வேண்டுமென எண்ணோம்! போர் நீண்டேதோற்றோம்!

மேலைநாட் டரசினர்க்கெம் நியாயம் ஊட்ட
மிகுதகையர் எனத்தலைவர் அனுப்பி வைத்த
நாலைவர், மக்கள்தெரி, பா.ஊக் கள்போய்
நன்காற்றத் தவறியதால் இருபதுக்கும்
மேலந்த நாட்டெதிர்ப்போ தணிய வில்லை!
வீழ்த்திட்டார் எமை!உதவ ஒருநா டில்லை!
ஞாலமெங்கும் உறைகற்ற தமிழர் அவ்வந்
நாடுகளில் இனியேனும் அதனைச் செய்வோம்!

கடத்துண்டும், கொலையுண்டும் ஈழத் தின்றும்
கலங்காமல் தமிழர்போ ராடும் போது
ஒடுக்குண்ணல், பயமின்றிப் புலத்தில் வாழும்
ஒருபத்து லட்சம்பேர் ஓய்ந்தி ருக்கோம்!
எடுத்தெடுத்துப் போர்க்குற்றச் சான்றெல் லாமே
இம்மாதப் பதினைந்துள் ஐ. நா. மன்றில்
கொடுத்திடுவோம் மின்னஞ்சல் தம்மின் மூலம்!
கொடியவிலங் கொடித்தீழத் தாயை மீட்போம்!

எத்துயரம், எத்தோல்வி, எத்தாக் கங்கள்
என்றாலும் வெல்வதற்கும், மனம்,சொல், செய்கைச்
சுத்தம்நாம் எய்திநிமிர்ந் தோங்கி டற்கும்,
துறவியர்,மெய்ஞ் ஞானியர்கள், சான்றோர் கூறும்
சத்தியத்தின் வெற்றிக்கும், மண்மீட் புக்கும்
சனி,சாத்தான் மானுடன்கால் வீழல் விட்டே,
இத்தினமே எம்மகந்தை தன்னைக் கொன்றே
இறைவன்கால் சரணடைவோம்! விரைந்தே வெல்வோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு அரவிந்தன்



# திவ்யராஜனின் 'உறவு' ஒரு பார்வை

**தமிழ்ப் படமே பார்ப்பதில்லை என்று விமர்சித்தவர்களை இரண்டாவது தடவையும் தியேட்டர் வாசலுக்கு இழுத்துவந்த அற்புதமான கலைப்படைப்பு உறவு!**

இந்த உறவு படத்தின் மூலம் தமிழ் சினிமா ரசிகர்களிடத்தே ஒரு பாலமமைத்து கனடிய தமிழ் திரைப்பட வரலாற்றில் ஒரு திருப்புமுனையை திரைப்படக் கலைஞர் திவ்வியராஜன் ஏற்படுத்தியிருக்கிறார்.

கனடிய தமிழ் திரைப்படத்துறையில் திடீரென ஒரு மந்தநிலை ஏற்பட்டபோது, ஈழத்து தமிழ் திரைப்படத்துறை போல கனடிய தமிழ் திரைப்படத்துறையும் முகவரியற்றுப் போய்விடுமோ என்ற பயம் இங்கே உள்ள தமிழ் சினிமாக் கலைஞர்களிடையே ஏற்பட்டதென்னவோ உண்மைதான்.





அதிஸ்டவசமாக சமீபத்தில் வெளிவந்து பல பரிசுகளைப் பெற்ற லெனின் எம். சிவத்தின் 1999 என்ற தமிழ்ப்படம் கனடிய தமிழ் சினிமா சோடை போய்விடவில்லை என்பதை நிரூபித்துக் காட்டியிருந்தது. அதேபோல இப்போது வெளிவந்திருக்கும் உறவு படமும் சாதனை படைக்கக் காத்திருக்கிறது.

கணவன், மனைவி இருவரும் ஒருவரை ஒருவர் மனதாரப் புரிந்து கொள்வதும், விட்டுக் கொடுத்து அனுசரித்துப் போவதும் தான் திருமண பந்தத்தின் முதலாவது விதி என்பதை உணர்ந்து கொள்ளாவிட்டால் அந்தக் குடும்பமே சந்தேகத்தில் அழிந்து போய்விடும் என்பது மட்டுமல்ல, குடும்பப்பிரச்சனையில் தேவையற்ற மூன்றாம் மனிதரின் தலையீடும் ஒரு குடும்பத்தை அழித்துவிடும் என்பதை எடுத்துக்காட்டுவதே இந்தப்படத்தின் மூலக் கருவாகும்.

இலங்கையில் பிறந்ததால்தான் கதாநாயகன் அப்படி நடந்து கொள்கிறான் என்ற மனப்பான்மையோடு படம் பார்த்துவிட்டு விமர்சனம் எழுதினால் அது அபத்தம். மேலை நாட்டில் பிறந்தவர்கள்கூட இதைவிட மோசமாக நடந்து கொள்ளலாம். கட்டிலில் படுத்துக் கொண்டு எதையோ எதிர்பார்த்துக் கொட்டாவி விட்டுக் கொண்டிருந்தவனுக்கு அது கிடைக்காவிட்டால் கோபம் வராமல் என்ன செய்யும் என்று பின்னால் படம் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் முணுமுணுத்தது இப்பொழுதும் என் காதுகளில் கேட்கிறது. கதை வசனம் நெறியாள்கை மூன்றையும் கலைஞர் திவ்வியராஜனே செய்திருப்பதால் ஒவ்வொரு அசைவிலும் அதை மானசீகமாக உணர்ந்து செய்திருப்பது தெளிவாகத் தெரிகின்றது. இந்தப் படத்தின் மூலம் தான் சிறந்ததொரு நெறியாளர் என்பதை நிரூபித்திருக்கின்றார்.

நடிகர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பாத்திரங்களை உணர்ந்து செய்திருக்கிறார்கள். சுதாகரனுடனான உரையாடலில் திவ்வியராஜனின் குறும்புப் பேச்சு பார்வையாளர்களைச் சிரிக்க வைக்கிறது. கதாநாயகன் சுதாகரன் பாத்திரத்தை உணர்ந்து நடித்திருக்கிறார். உணர்வுகளைத் திறமையாக வெளிக் கொண்டுவந்திருக்கிறார்.

கதாநாயகி சங்கீதா பற்றிச் சொல்லவே தேவையில்லை. அவர் ஒரு நடனதாரகை என்பதால் முகபாவனை மூலமே அத்தனை உணர்வுகளையும் அள்ளிக் கொட்டுகின்றார். அவரது விழிகள் பல கதைகள் சொல்லாமல் சொல்கின்றன. எந்த சபையிலும் பாரதி பாடல்கள் ரசிகர்களை இலகுவில் கவர்ந்துவிடுவதுண்டு. அந்தப் பாரதிபா-டலை வைத்தே அப்பா க. நவமும் மகள் சங்கீதாவும் ரசிகர்களை படம் தொடங்கிய உடனேயே தங்கள் பக்கம் இழுத்துவிடுகிறார்கள்.

திவ்வியராஜனின் முதற் படமான சகா படத்தில் அப்பாவாக க. நவம் நடித்தபோதே இவர் சிறந்ததொரு குணசித்திர நடிகர் என்பதை இனம் கண்டு கொண்டேன். அதை இந்தப் படத்திலும் அவர் நிரூபித்து அப்பா பாத்திரத்திற்கு இயல்பாகவே உயிரூட்டியிருக்கிறார். பாரதி கவிதை படிக்கும் போது எல்லோர் மனதைத் தொடுகின்றார். நாங்களும் அவருடன் சேர்ந்து வாய்க்குள் அந்தக் கவிதையை முணுமுணுக்கிறோம்.

இவர்களுக்கு எந்த விதத்திலும் தான் குறையவில்லை என்பதை நிரூபிப்பது

(26ம் பக்கம் வருக)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குயின்ரஸ் துரைசிங்கம்

# வெளிவாரி ஒப்பந்த சேவை Job Outsourcing

வெளிவாரி ஒப்பந்த சேவை என்பதற்கான ஆங்கிலப் பதமான அவுட்சோசிங் (outsourcing) என்பது பெரும்பாலும் ஒரு குழப்பம் நிறைந்த சொற்பதமாகவே பார்க்கப்படுகிறது. ஒரு நாடு பிறிதொரு நாட்டுக்கு ஒப்பந்தங்களைக் கொடுப்பதோ, ஒரு நிறுவனம் பிறிதொரு நிறுவனத்திடம் உபரி ஒப்பந்தங்களைக் கொடுப்பதோ ஒன்றும் கடந்த காலங்களில் நடந்திராத புதிரான அல்லது புதிதான விடயங்களல்ல. பல நாடுகளும், ஒன்றையொன்று தங்கி வாழ்கின்ற, பல்வேறு விடயங்களில் தத்தமது திறமைகளை, மூலவளங்களை, உற்பத்திகளை, உழைப்பைப் பரிமாறி, ஒன்றையொன்று தங்கி, தாங்கி, தட்டிக்கொடுத்து அல்லது கௌரவமாகத் தாரைவார்த்து, தன்னிறைவுள்ள நாடுகளாக உலாவருகின்றன.

அதனால், ஒப்பந்த சேவைகளை வேறு நாட்டிற்கு வழங்குவது என்பது ஒரு புதிய விடயமல்ல என்றாலும்கூட, அண்மையில் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா இந்தியாவிற்கு மேற்கொண்ட விஜயத்தின்போது, அதிகம் பேசப்பட்ட விடயங்களில் இந்த வெளிவாரி ஒப்பந்த சேவைகளும் ஒன்று என்ற வகையில், பொதுமக்களின் கவனம் இதன்மீது குவிந்துள்ளது. எனவே இதுபற்றிய ஆழ அகலங்களையும் இதன் தாற்பரியங்களையும் இந்தக் கட்டுரையில் சுருக்கமாகப் பார்க்கலாம். ஒரு தயாரிப்பின் வடிவமைப்பை அல்லது உற்பத்தி சார்ந்த மேலதிக சேவைகளை, அதே நாட்டில் செய்வதால் வருகின்ற உயர் செலவீனத்தைத் தவிர்க்க, சில நிறுவனங்கள், தங்களது உற்பத்தியின் ஒரு பகுதியை வேறு சில நாடுகளில் தயாரிப்பதற்கு உதிரி ஒப்பந்தங்களாக வழங்கி, அதன்மூலம் உற்பத்திசார் செலவீனத்தை கட்டுப்படுத்த முயல்கின்றன.

குறிப்பாக, தொழில் ரீதியாக மிகக் கடுமையான சட்டவிதிகள் உள்ள மேற்குலக நாடுகளில், தொழிலாளர் ஊதியம், காப்புறுதி, பாதுகாப்பு நடைமுறைகள், தொழிலக வாடகை உட்பட்ட இதர செலவுகள், மிக உயர்வாகக் காணப்படுகின்றன. இதன் காரணமாக, இத்தகைய தொழில்சார் சட்டவிதிகள் அதிகமற்ற மூன்றாம் உலக அல்லது ஊதியம் குறைந்த நாடுகளில் இவற்றைத் தயாரிப்பதால், அவற்றின் உற்பத்தி நிகரவிலையை கேள்வியின்பால் சாதகத் தன்மை கொண்டதாக மாற்றிக்கொள்ள வாய்ப்பு உருவாகிறது. இதனால் 80களில் இப்படி உதிரி ஒப்பந்தங்களை தாய்வான், கொரியா, சீனா, மலேசியா, பிலிப்பைன்ஸ், இந்தியா போன்ற, தனிநபர் ஊதியம் மிகவும் குறைந்த பல்வேறு நாடுகளுக்கும் வழங்கும் ஒரு நடைமுறை வழக்கத்திற்கு வந்தது.

ஆரம்பத்தில் இப்படி ஒப்பந்த ரீதியாக வழங்கப்பட்ட தொழில் வாய்ப்புக்களில், தொலைபேசி ஊடாக வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் வாங்க-விற்க அல்லது தொழில்நுட்ப உதவி தொடர்பான சேவைகளும் (tele-marketing) உற்பத்தி ரீதியில் விளையாட்டுப் பொருட்கள் அல்லது அழகுசாதனப் பொருட்களின் தயாரிப்பும் பெரிதும் உள்ளடக்கப்பட்டன. எனினும், காலப் போக்கில் தகவல் தொழில்நுட்பம், மின்வலை வடிவமைப்பு, சந்தை ஆய்வு, ஊடகவியல் என்று துணை ஒப்பந்த பணிகளை வழங்குவது விரிவடைந்தது.

எண்பதுகளின் இறுதிப் பகுதியில் பெரிதும் விரிவடைந்த இத்தகைய ஒப்பந்த சேவை அமர்த்தல் செயல்பாடுகள், மேற்குலக நாடுகளில் சர்ச்சைகளைக் கிளப்ப ஆரம்பித்தன. சேவையின் தரம் பற்றிய அபாய எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன. வாடிக்கையாளர்களின் திருப்தி குறித்து உரிய ஆய்வுகள் நடத்தப்படாமல், செலவைக் குறைப்பதை மட்டுமே பிரதான நோக்கமாகக் கொண்ட பல நிறுவனங்கள், கடும் எதிர்ப்பை எதிர்கொண்டன. மொழியாற்றல், உச்சரிப்பு, நாட்டின் கலாசாரம், நேரம், காலநிலை, பேசுபொருள் போன்ற விடயங்களில், பாரிய இடைவெளி உணரப்பட்டது. குறிப்பாக அழைப்பு மையங்களிலுள்ள முகவர்கள், வேறு மொழியைப் பேசினாலும், உச்சரிப்பு, பண்பட்ட மொழிப்பாவனை, தகுதரமுள்ள கருத்துப் பரிமாற்றம் போன்றவற்றில் மிகப்பெரிய விமர்சனங்கள் எழுந்தன. அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற சில நாடுகளில், அந்நாட்டு தேர்தல்களில் மிகமுக்கிய பேசுபொருளாக, இந்த ஒப்பந்த சேவை அமர்த்தம் (ழுரவளழரசஉைபெ) காணப்பட்டதுடன், அதிபர் யார் என்பதைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகளில் ஒன்றாக வெளிநாடுகளுக்கு ஒப்பந்த சேவைகளை வழங்கும் விடயம் எதிர்க்கட்சிகளால் பெரிதுபடுத்தப்பட்டது.

இதன் காரணமாக, எண்பதுகளில் வேகவேகமாக மூன்றாம் உலக நாடுகளுக்கும் ஏனைய ஊதியம் குறைந்த நாடுகளுக்கும் கைமாறிப்போன பல ஒப்பந்த சேவைகள், தொண்ணூறுகளில் மீளப் பெறப்பட்டன. இப்படி மீளப் பெறப்படும் ஒப்பந்தங்களால், மேற்குலக நாடுகளுக்கு மேலதிக வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்படுவதாகவும், உற்பத்தியின்போது வேறுநாடுகளில் முதலிடப்படும் ஒப்பந்தக் கொடுப்பனவுகள், உள்நாட்டிலேயே தங்கிவிட வாய்ப்புக் கிட்டியிருப்பதாகவும் ஆய்வுரீதியாக நியாயப்படுத்தப்பட்டது.


இப்படி மீளவும் தத்தமது நாட்டுக்கு ஒப்பந்தங்களை வரவேற்று உள்நாட்டு மூலதனத்தையும் முதலீட்டையும் வளர்ப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் காரணமாக, மேற்குலக நாடுகளில் தொழில் வாய்ப்புக்கள் அதிகரிக்குமென ஆரூடங்கள் கூறப்பட்டன. ஒப்பந்த சேவைகளை தத்தமது நாடுகளில் மேற்கொள்வதற்கான முயற்சிகளை அவசியம் எடுப்பதென அரசியல்வாதிகள் வழங்கிய வாக்குறுதிகள் காரணமாக, தொண்ணூறுகளில் பல்வேறு செயல்திட்டங்கள் உள்வாங்கப்பட்டு, ஒப்பந்த சேவைகள் மீளவும் மேற்குலக நாடுகளில் செயற்படுத்தப்பட்டன.

இரண்டாயிரத்திற்குப் பின்னர், இந்த செயல்திட்டங்களின் விளைவுகள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போதுதான், அதிர்ச்சி தரும் பல விடயங்கள் மேற்குலக கொள்கை வகுப்பாளர்களுக்கு உறைக்க ஆரம்பித்தன. ஒப்பந்த சேவைகளை ஊதியம் குறைந்த நாடுகளில் செயற்பட வைப்பதனால் சேவையின் தரம் குறைவதாக நம்பப்பட்ட நிலையில், அங்கிருந்து மீளவும் மேற்குலக நாடுகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஒப்பந்த சேவைகளின் தரம், அதைவிட மோசமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. உதாரணமாக, அமெரிக்காவிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு வழங்கப்பட்ட சேவையில், அந்த நாட்டினர் வழங்கிய சேவை, குறைந்த ஊதியத்தில் அதிக

(32ஆம் பக்கம் வருக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பிரிகேடியர்' சு.ப. தமிழ்ச்செல்வன் மற்றும் போராளிகள் மூன்றாவதாண்டு நினைவு







பிரிகேடியர் சு. ப தமிழ்ச்செல்வன், மற்றும் ஆறு போராளிகளினது மூன்றாவது ஆண்டு நினைவான 'விடுதலைமுரசு' நிகழ்வு கடந்த மாதம் ஆறாம் திகதி கனடா கந்தசாமி கோவில் மண்டபத்தில் நடைபெற்றது. ஸ்காபரோ கலை பண்பாட்டு அமைப்பினர் இதனை ஏற்பாடு செய்திருந்தனர். சிறப்புரைகளும், நினைவெழுச்சி நடனங்களும் இங்கு இடம்பெற்றன. (ஒளிப்படங்கள்: 'செய்தி' இந்திரன்)













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்த அறிக்கைக்கு தமிழர்கள் ஐ.நா.வை வலியுறுத்த வேண்டும்!

## *அமெரிக்க பேராசிரியர் பிரான்சிஸ் பொய்ல் கோரிக்கை!*

இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள போர்க்குற்றங்கள், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை தொடர்பில் ஐக்கிய நாடுகள் திட்ட அறிக்கையொன்றைத் தயாரிக்கவேண்டுமென்று உலகமடங்கிலுமுள்ள தமிழர்கள் வலியுறுத்தவேண்டுமென இலியோனிஸ் சட்டக்கல்லூரியின் பேராசிரியர் பொய்ல் கூறியுள்ளார்.

சர்வதேச சட்டம் தொடர்பில் நிபுணத்துவம் பெற்றவரான பேராசிரியர் பொய்ல், கொங்கோ ஜனநாயகக் குடியரசில் நிகழ்ந்'த மிக மோசமான மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் என்பன குறித்து ஐக்கிய நாடுகள் திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்திருப்பது சம்பந்தமாகவே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.


Prof. Francis Boyle

இந்த அறிக்கை தொடர்பான கட்டுரை ஒன்றைச் சர்வதேச சட்டத்திற்கான அமைப்பு வெளியிட்டுள்ளது.

கொங்கோவில் நடந்த மனித உரிமைகள் மற்றும் சர்வதேச சட்ட மீறல்கள் போன்ற போர்க்குற்றங்களே இலங்கை அரசாங்கத்தினாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் 500 பக்கங்களைக் கொண்ட கொங்கோ சம்பந்தப்பட்ட அறிக்கையில் கொலைகள், வல்லுறவுகள், நாசம் விளைவித்தமை மற்றும் பயங்கரமான தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாகவும் அதுபோன்ற குற்றச்செயல்கள் தொடர்ந்தும் இடம்பெறுவதாகவும் சர்வதேச சட்டம் தொடர்பான அமெரிக்க அமைப்பின் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் திட்ட அறிக்கை தயாரிக்கும் செயற்பாடுகள் 2008 யூலையில் ஆரம்பிக்கப்பட்டன. சர்வதேச குற்றங்கள் புலனாய்வு மேற்கொள்வதிலும் வழக்கு தொடர்வதிலும் நிபுணத்துவமிக்க கனடிய வழக்கறிஞரான லக்கோட் (Luccote) என்பரின் தலைமைத்துவத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் 1280 சாட்சிகளிடம் நோர்காணல் நடத்தப்பட்டது.2008 அக்டோபர் மாதத்திற்கும் 2009 மே மாதத்திற்கும் இடையிலான காலப்பகுதியில் 1500 ஆவணங்கள் கொங்கோ ஜனநாயக குடியரசு முழுவதும் திரட்டப்பட்டன என்று அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த திட்ட அறிக்கை 2009 யூன் மாதம் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. 2010 ஆகஸ்டில் அது இறுதி முடிவு செய்யப்பட்டது.

இந்த அறிக்கை தொடர்பான விபரங்கள் ஊடகங்களுக்கு கசியத் தொடங்கிய பின்னர் இரு மாதங்கள் கழிந்த நிலையில் 2010 அக்டோபர் அந்த அறிக்கை உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது.

இலங்கையில் 40000 தமிழ் பொது மக்கள் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படுவதும் இலங்கை பாதுகாப்பு படைகளின் மிகக் கொடூரமான நடவடிக்கைகளும் கொங்கோ தொடர்பில் ஐக்கிய நாடுகளினால் வெளிக்கொணரப்பட்ட தகவல்களை ஒத்ததாக அல்லது அதை விட மோசமானதாக அமைந்திருப்பதாக அமெரிக்காவை தளமாகக் கொண்ட செயற்பாட்டுக் குழுவான இனப்படுகொலைக்கு எதிரான தமிழர் அமைப்பின் (TAG) பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

யுத்தக்குற்றங்கள், மனிதாபிமானத்திற்கெதிரான குற்றங்கள், சாத்தியமான இனப்படுகொலைகள் என்பன கொங்கோ நாட்டில் இடம்பெற்றுள்ளன என்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர், இலங்கையிலும் அதைப்போன்ற மிக மோசமான குற்றச்செயல்கள் இடமபெற்றுள்ளதாகவும் எனவே சுயாதீனத்தன்மையுடன் கூடிய சர்வதேச விசாரணைக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு இலங்கைக்கு எதிரான போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றப்பத்திரத்தை சட்டரீதியாகத் தயாரிக்க வழிவகை செய்யப்பட வேண்டுமெனவும் கூறியுள்ளார்.

சர்வதேச சட்டத்திற்கான அமைப்பு (ASIL) வெளியிட்டுள்ள கட்டுரையில், நேற்றைய குற்றங்களுக்கான தண்டனை குறித்த பயமின்மை எனும் நடைமுறையானது இன்றைய குற்றங்களை அடிக்கடி மேற்கொள்ள வழிவகுக்கிறது. ஏனெனில் அதற்குப் பொறுப்பான குற்றவாளிகள் அதனை அடிக்கடி செய்வார்கள்.

அத்தகைய சூழ்நிலையில் பொறுப்புக் கூற வேண்டிய குற்றவாளிகளை வைத்திருப்பது வன்முறைகளைத் தடுக்கும் நடைமுறையை இல்லாமற் செய்துவிடும் என்று இறுதியாகத் தெரிவித்துள்ளது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவீரருக்கு மதிப்பளிக்கும் நினைவெழுச்சி நாள்

# தேசிய உணர்வும் மாவீரர் நினைவும் எழுச்சி கொண்ட நாள்!


கார்த்திகை 27 சனிக்கிழமை. அதிகாலை ஐந்தரை மணி. குளிர் காற்று சுழன்றடிக்கிறது. பனித்துகள்கள் அங்குமிங்கும் பறந்தவாறு ஓடிக்கொண்டிருக்கின்றன. ஊசிக்குளிர் உடலை ஊடறுத்து உள்ளே நுழைகின்றது. ஐந்தாம் திணை என்று வர்ணிக்கப்படும் கனடாவில், தமிழர்கள் பெருமளவில் செறிந்து வாழும் ரொறன்ரோ பெருநகரின் மார்க்கம் திடலுக்குள் எனது வாகனம் மெதுமெதுவாக நுழைகின்றது. ஏறத்தாழ இருநூறுக்குமதிகமான வாகனங்கள் ஏற்கனவே அங்கு அணிவகுத்து நிற்கின்றன.

மாவீரர் நினைவுக்கென விசேடமாக உருவாக்கப்பட்ட பழங்காலக் கொட்டகை வடிவிலான அந்த வெண்ணிற நீள்மண்டபம், தமிழுணர்வு நிரம்பிய மக்களை உள்வாங்கிக் கொண்டிருக்கின்றது. ஆறு மணியாகும்போது அங்கிருந்த மக்கள் தொகை சுமார் இரண்டாயிரத்தைத் தாண்டியதாகக் காணப்படுகின்றது. அடுத்த ஒவ்வொரு நிமிடமும் குழந்தைகள், இளையோர், குடும்பத்தினர், மூத்தோர் மற்றும் நினைவு நிகழ்ச்சிகளை வழங்கும் இளையோர், கலைஞர்கள் என்போரின் வருகையால் மண்டபம் நிறைய ஆரம்பித்தது.

முன்முகப்பில் மாவீரர் வணக்கத்தலமாக 'உறுதியின் உறைவிடம்' அமைக்கப்பட்டிருந்தது. எங்களின் 'கண்கண்ட தெய்வங்களான' மாவீரர்களின் உயிர்க்கொடையை வெளிப்படுத்திய இந்த நினைவாலயம், ஈழத்தமிழரின் முப்பதாண்டு காலப் பேராட்ட வரலாற்றின் சின்னமாக நிமிர்ந்து நின்று, பல வீர நிகழ்வுகளை நினைவூட்டுகின்றது. 1982 நவம்பர் 27ல் களப்பலியான முதலாவது வேங்கையிலிருந்து கடந்தாண்டு முள்ளிவாய்க்கால் வரை மட்டுமன்றி,













ஒளிப்படங்கள்:











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ாள் - ரொறன்ரோ, கனடா - கார்த்திகை 27, 2010

# ாள்! தமிழர் வெள்ளத்தால் மார்க்கம் திடல் பொங்கி எழுந்தது!







ங்கள்: கோகுலன்










இன்றும் சிங்கள அரசினால் கொடூரமாகக் கொல்லப்படும் நாற்பதாயிரம் வரையான வீரர்களின் நினைவு நெஞ்சினை வருடுகின்றது.

சுமார் நாற்பதாயிரம் சதுர அடியைக் கொண்ட சூடேற்றப்பட்ட உள்ளரங்கின் பிரதான பகுதி எழுச்சி நிகழ்வுகளின் அரங்கமாக அமைக்கப்பட்டிருந்தது. 40 X 40 அடி அளவிலான மேடையின் முன்னால் ஐயாயிரத்துக்கும் அதிகமான ஆசனங்கள் நிரைநிரையாக அடுக்கப்பட்டிருந்தன. சரியாக காலை 6.55 மணிக்கு வழக்கம்போல மாவீரர் நினைவொலி எழுப்பப்பட்டது. அதனையடுத்து அகவணக்கத்தைத் தொடர்ந்து தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் ஈகச்சுடர் ஏற்றுதல் காணொளிக் காட்சியாக அரங்கின் பெருந்திரைகளில் காண்பிக்கப்பட்டது.

கனடிய மற்றும் தமிழீழ தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டு நினைவெழுச்சி ஆரம்பமானதோடு மாவீரர் நினைவாலயத்தில் மலர் வணக்கம் தொடங்கியது. அன்றைய தினம் வைபவம் முடியும் வரை (இரவு பத்து மணி) வருகை தந்திருந்த ஒவ்வொருவரும் கார்த்திகைப் பூக்களால் அங்கு அர்ச்சித்து வணங்கினர். பலர் தங்கள் துயரைத் தாங்க முடியாது கண்ணீர் சொரிந்து சிரம் தாழ்த்திக் கைகூப்பித் தொழுதனர்.


நினைவெழுச்சிக் கலை வடிவங்கள் காலை 6:30 மணி, மதியம் 12:00 மணி, பிற்பகல் 3:00 மணி, மாலை 6:00 மணி என நான்கு நிகழ்வுகளாக இடம்பெற்றது. தாயகக் கனவினை நினைவினில் சுமந்து கானம் பாடும் வானம்பாடிகளின் எழுச்சிப் பாடல்களுடன் நான்கு நிகழ்வுகளும் ஆரம்பமாகின. ரொறன்ரோவின் பத்துக்கும் அதிகமான முன்னணி நடனக் கல்லூரிகளின் மாணவர்கள் வீர உணர்வும்

மறுபக்கம் வருக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடியத் தமிழ் இளையோர் நடத்திய மாவீரர் நினைவுத் தொடக்க நிகழ்வு


















கனடிய மண்ணில் இவ்வருடம் மாவீரர் நினைவு நிகழ்வுகள் தமிழ் இளையோராலும் மாணவராலும் இருபதுக்கும் அதிகமான இடங்களில் தொடர்ச்சியாக நடத்தப்பட்டது. ஒன்ராறியோவிலுள்ள பல்கலைக்கழகங்களின் தமிழ் மாணவர்கள் அமைப்புகள், தமது வளாகங்களில் உணர்வுபூர்வமாக இதனை நடத்தி ஒரு சரித்திரம் வரைந்துள்ளனர். மாவீரர் நினைவின் மூன்று நாள் நிகழ்ச்சிகளினது தொடக்க வைபவம் நவம்பர் 25ஆம் திகதி கனடிய தமிழ் இளையோர் அமைப்பால் ஸ்காபரோ மெட்ரோபொலிட்டன் அரங்கில் நடத்தப்பட்டது. முற்று முழுதாக இளையோரின் உரைகளும் அவர்களின் எழுச்சி நிகழ்ச்சிகளுமே இங்கு இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்திலிருந்து வந்திருந்த மனித உரிமைகள் நிறுவனத்தைச் சேர்ந்த ஜனனி ஜனநாயகம் இந்நிகழ்வில் சிறப்புரை வழங்கினார். (ஒளிப்படங்கள்: கோகுலன்)






## மாவீரருக்கு மதிப்பளிக்கும் நினைவெழுச்சி நாள்

(முன்பக்கத் தொடர்...)
மாவீரர் நினைவும் இணைந்த பாடல்களைத் தெரிந்தெடுத்து அவற்றுக்கு அபிநயம் வழங்கி எழுச்சிக்கு மேலும் மெருகூட்டினர். அனேகமான நடன நிகழ்ச்சிகளிலும் எங்கள் தேசியக்கொடி ஏந்தப்பட்டதானது காலத்தின் தேவையை ஒட்டியதாக அமைந்திருந்தது. தமிழரின் போராட்ட கால நிகழ்வினைச் சித்தரிக்கும் இசை நாடகம் முத்தாய்ப்பாக அமைந்தது.

அனைத்து நிகழ்வுகளின் இடையே, உணர்வும் அறிவும் கலந்ததும், எதிர்கால நடவடிக்கைகளுக்குமான கருத்துகளை விதைக்கும் சிற்றுரைகள் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. பிற்பகல் மற்றும் மாலைநேர நிகழ்ச்சிகள் நடைபெற்றபோது அரங்கம் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்ததால் பல்லாயிரம் மக்கள் வெளியே குளிரடித்த நிலையிலும் காத்திருந்து உட்சென்று மலர் வணக்கம் செலுத்தியமை தேசியத்தில் அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையை வலுப்படுத்திக் காட்டியது.

றொறன்ரோவில் இம்முறை மாவீரர் நினைவு வைபவம் நடைபெறுமா என்ற கேள்வி ஒரு சாராரிடம் இருந்தது. இதற்கான இடம் கிடைக்காது என்று இன்னொரு சாரார் கதை பரப்பினர். இதனைக் குழப்பவும் இதற்கான மண்டபத்தை எடுக்க விடாது தடுப்பதிலும் ஒரு குழுவினர் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். இதற்கெனப் பல வர்ணங்களில் வசை பாடும் துண்டுப் பிரசுரங்களும், மின்னஞ்சல் கடிதங்களும் இந்தக் குழுவினரால் தொடர்ந்து வெளியிடப்பட்டன. இதுவே இந்த வருட மாவீரர் நினைவெழுச்சி நாள் நிகழ்வுகளை வீறு கொண்டெழச் செய்து, கால நிலையையும் பொருட்படுத்தாது தேசிய உணர்வாளர்களை பல்லாயிரக் கணக்கில் திரளச் செய்தது என்பது இன்று வரலாறாகி விட்டது.

'எம்முள் ஊற்றெடுத்துப் பாயும் தேசிய உணர்வையும் விடுதலை வேட்கையையும் எந்தத் தீயசக்தியாலும் தடுக்க முடியாது. இனிவரும் நாட்களில் இதனை மேலும் பார்க்க முடியும்' என்று ஓய்வுபெற்ற ஆசிரியரான கந்தையா தணிகாசலம் (78 வயது) அவர்கள் இங்குள்ள தமிழ் வானொலிச் சேவையொன்றில் தெரிவித்த கருத்து ஒரு பானை சோற்றில் ஒன்றாகப் பார்க்கப்பட வேண்டியது.

'தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்' என்ற இலக்கு மேலோங்கிச் செல்வதை இவ்வருட நினைவெழுச்சி நாள் நிரூபித்துள்ளது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்

# என்றுமுள்ள செந்தமிழ்

42

இவரைப் போய் அதிமதுரக் கவிராயர் என்கிறார்களே!

கத்துக் கடல்சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும்போதில் அரிசி வரும் - குத்தி உலையில் இட ஊரடங்கும் ஓரகைப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்!

காளமேகப் புலவர் பாடிய பாடலுக்கு நேரடியான பொருள் இதுதான்.

ஒலியெழுப்பும் கடல் சூழ்ந்த இந்த நாகப் பட்டினத்தில் உள்ள காத்தானின் சத்திரத்திலே, சூரியன் மறைகின்றபோதுதான் அரிசி வந்து சேரும்.

அதைத் தீட்டி உலையிலே போடும்போது ஊரே அடங்கிப்போய்விடும் அதாவது இரவாகி, ஊரவர்கள் நித்திரையாகி விடுவார்கள்.

சாப்பிட வந்தவர்களுக்கு ஓர் அகப்பைச் சோற்றை இலையிலே வைக்கும்போது வானத்தில் விடிவெள்ளி தோன்றிவிடும். அதாவது மறுநாள் புலரும் வேளை வந்துவிடும்.

இதெல்லாம் ஒரு சத்திரமா?

இப்படிக் காத்தான் சத்திரம்பற்றி இழிவாகப் பாடிவிட்டு பின் எப்படி அந்தப்பாடல் காத்தானைத் தூற்றிப் பாடவில்லை போற்றிப்பாடியது என்று காளமேகப் புலவர் மாற்றிச் சொல்வார்?

இங்கேதான் காளமேகப் புலவர் தனது தமிழ்ப் புலமையை வைத்துக்கொண்டு சொல் விளையாடுகிறார். அவர் காத்தானுக்கு பாடலின் பொருளை இப்படி விளக்கினார்.

காத்தான் சத்திரத்தில் உண்கின்றவர்கள் நிறையப் பேர் ஆனதினால், பகல்போது மட்டுமின்றி, ஞாயிறு மறையும் அந்த மாலை வேளையிலும் அரிசி மூட்டைகள் வந்த வண்ணமிருக்கும்.

வந்து அரிசியைச் சமைத்துக் கொட்டிக்கொண்டிருக்க ஊரிலுள்ள மக்கள் எல்லாம் மகிழ்ச்சிப் பெருக்கால் நிறைவு அடைவார்கள்.

வெள்ளை வெளேர் நிறத்தில் இலையில் வந்துவிழும் சாதத்தின் நிறத்தினைக் கண்டு சுக்ர நட்சத்திரம் இருக்கிறதே? அதாவது விடிவெள்ளி.

அதுவும் வெட்கப்பட்டு ஓடிப் போகுமாம்.

காளமேகப் புலவருக்கு ஏனைய புலவர்களிடம் இருந்து எதிர்ப்பு இல்லாமல் இல்லை. வித்துவக் காய்ச்சல் என்று ஒன்று இருக்கிறதல்லவா?

திருமலைராயன் அவையில் அரசவைப் புலவராக இருந்தவர் அதிமதுரக் கவிராயர். அவரும் அவரது சீடர்களும் தாங்கள்தாம் பெரும் தமிழ்ப் புலவர்கள் என்ற இறுமாப்புடன் இருந்தனர். இதனை அறிந்த காளமேகப் புலவர் அந்த நகரத்தை அடைந்தார்.

காளமேகப் புலவர் அந்த நகரத்தை அடைந்த நேரத்தில் அதிமதுரக் கவியும் அவரது கூட்டமும் நேர் எதிரே வந்து கொண்டிருந்தனர். நன்றாக அலங்கரிக்கப்பட்ட யானை மீது அதிமதுரக் கவி அமர்ந்திருக்க, ஏனைய புலவர்கள், குடை, கொம்பு, சாமரம் முதலிய விருதுகள் தாங்கிய வண்ணம் உடன் வந்து கொண்டிருந்த காட்சி காளமேகப் புலவரை ஆத்திரமடைய வைத்தது!

அவரது ஆத்திரத்துக்குத் தூபதீபம் காட்டுமாப் போல் ‘அதிமதுரக் கவிராய சிங்கம் பராக்’ என்று முழங்கிய வண்ணம் கூட்டத்தினர் வந்தனர். காளமேகப் புலவரும் என்ன நடக்கிறது என்பதை வேடிக்கை பார்க்க அந்தக் கூட்டத்துக்குப் பின்னாலே போய்க் கொண்டிருந்தார்.

அந்தக் கூட்டத்திலுள்ள ஒரு ஏவலன் தன் கையில் இருந்த மான்தோல் பட்டையால் காளமேகப் புலவரின் மார்பிலலே தட்டி ‘அதிமதுரக் கவிராயருக்குப் பராக்’ என்று முழங்குமாறு சொன்னான்.

காளமேகப் புலவர் சும்மா விடுவாரா? அவருக்குக் கோபம் பொத்திக் கொண்டு வந்தது. அது ஒரு பாடலாக வெளிவந்தது.

அதிமதுர மென்றே அகில மறியத்
துதிமதுர மாயெடுத்துச் சொல்லும் - புதுமை யென்ன
காட்டுச் சரக்குலகில் காரமில்லாச் சரக்குக்
கூட்டுச் சரக்கதனைக் கூறு.

அதிமதுரம் அதிமதுரம் என்று அகிலம் எல்லாம் பறையறை கொட்டி முழக்கித் துதி பாடுவதன் பொருள்தான் என்ன?

இவரிடத்தில் என்ன சிறப்புகள் உண்டு?

